Free Circulation Germany- England
மணி: 75 - ஓசை: 349 ஐப்பசி. October 2025

# வெற்றிமணி

Vettimaniy
ESTD 1950
31 TH years IN EUROPE Successful Publishing
Monthly Newspaper
பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் B.F.A
இதழ் 349

# மீண்டும் பற்றவைக்கப்பட்டிருக்கும் மாகாண சபைத் தேர்தல் விவகாரம்

கொழும்பிலிருந்து... என்.அசோக்



## எடுப்பாக இருக்க எங்கட ஆச்சி சொல்லும் மந்திரம்



## ஈழத்து சினிமா

நவயுகா குகராஜா அவர்களின் பொம்மை

அனைவருக்கும் எமது இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்

யேர்மனியில் வளர்ச்சி பெறும் வெளிநாட்டவர்க்கு எதிரான கட்சி!










# இறந்தகாலமும் நிகர்காலமும்
# கை குலுக்கிய நேரம்



குழந்தைப்பருவம் யாவரும் இரசிக்கும் பருவம். யாவரும் பரவசம் கொள்ளும் காலம் அது.

சில பொருட்களை பார்க்கின்றபோது எமக்குள் பல நினைவுகள் அசை போடும். அந்தப் பொருட்களுக்கு அந்த அளவு சக்தி உண்டு.

கடந்த மாதம் யேர்மனியில் டோட்மூண்ட் நகரில் இடம்பெற்ற தமிழர் தெருவிழாவில். (05,06,07,-09.2025) தமிழர் ஆவணக்கண்கட்சி இடம் பெற்றது. இக்கண்காட்சியினை பல வருடங்களாக பல நாடுகளில் திரு அன்ரன் அவர் நடத்தி வருகிறார். அவரது பணிக்கு தமிழ் மக்களாகிய நாம் தலைவணங்கிடவேண்டும். அத்தகைய பெரும் பணி அது. அதிகமானோர் இக் கண்காட்சியை தங்கள் பேரக்குழந்தைகளுடன் வந்து பார்த்து மகிழ்ந்தனர்.

பாட்டி அன்று தான் பாவித்த பொருட்களை கையிலெடுத்து பேத்திக்கு காட்டிக் காட்டி உருகியகாட்சி மனங்கொள்ளத்தக்கது.

தாய்ப்பால் மறந்து போச்சியில் பசுப்பால், மாப்பால் குடித்த தருணம், அந்தப் பால் போச்சியில் பிஞ்சுக்கரங்கள் தாளமிட்டபடி பால் பருகும். அன்று தாளமிட்டபடி பால் பருகிய அந்தப் பிஞ்சுக்



குழந்தை, இன்று பாட்டியாக, பாட்டனாக, அந்தப் பால் போச்சியை கையில் எடுத்து பேரக்குழந்தைகளுக்கு காட்டும்போது கண்கலங்கினர்.

அது மட்டுமல்ல அங்கு காட்சியில் இருந்த மூக்கு பேணி, கைவிளக்கு, காசுமாலை, ஏட்டுச் சுவடி (எமது யாதகம், யாவும் அன்று ஏடுகளில் எழுதப்பட்டு இருந்தது.) இவையாவும் எம்மை time travel செய்யவைத்து, நாம் வாழ்ந்த காலத்திற்கு அழைத்துச் சென்றது. கண்காட்சி கூடத்தில் கூடிநின்ற மக்கள் 1960 பின் பிறந்தவர்களும், 2015 பின் பிறந்தவர்களுமாக இருந்தார்கள். இறந்தகாலமும் நிகர்காலமும் கை குலுக்கிய நேரம் அற்புதமான தருணமாக யாவருக்கும் அமைந்து.




மாதவி

நீங்களும் இறந்தகாலத்திற்கு பயணித்து மகிழ இங்குள்ளவற்றை உன்னிப்பாக பாருங்கள். உங்கள் தோள்களில் சிறகுகள் முளைப்பதை உணர்வீர்கள்.



அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
ஓசை : 349



ஆரம்பம்: 1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
M.K.S.Sivakumaran B.F.A

Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com

**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே விலகிச்செல்கிறது

Vettimaniy Ltd
Company No: 8876276

# மீண்டும் பற்றவைக்கப்பட்டிருக்கும் மாகாண சபை தேர்தல் விவகாரம்

கொழும்பிலிருந்து...
என்.அசோக்

நீண்ட வரலாற்றை கொண்ட ஈழத் தமிழினம் தங்களது அரசியல் உரிமைக்காகவும் தங்களது மண்ணுக்காகவும் போராடி போராடி ஓய்ந்த போதெல்லாம், அவர்களது போராட்ட வடிவங்கள் ஏதோவொரு விதத்தில் அவர்களை தட்டி எழுப்பிக்கொண்டே வந்திருக்கிறது.ஈழத்தமிழர்களுடைய போராட்டத்துக்கு இத்தனை வயது என எவராலும் வரையறுத்துவிட முடியாது. காரணம், அவர்களது போராட்டம் என்பது வெவ்வேறு வடிவங்களில் ஆண்டாண்டு



காலமாக நடைபெற்றுக்கொண்டுதான் இருக்கிறது.அகிம்சைவழி போராட்டம், ஆயுத போராட்டம் என போராடிய தமிழினம் இன்று எந்த வடிவில் போராட்டத்தை முன்னெடுப்பது என்று தெரியாமல் நட்டாற்றில் விடப்பட்ட ஒரு இனமாக, நெஞ்சில் வலிகளையும் சுமைகளையும் சுமந்து கொண்டு வாழ்ந்து வருகிறார்கள்.

2009 முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்ட ஆயுதப்போராட்டத்திற்கு பின்னர் தமிழர்கள் தங்களது எதிர்காலம் என்னவாகப்போகிறது என்ற கேள்வியுடனேயே அடுத்த கட்டத்துக்கு நகர ஆரம்பித்தார்கள். அவர்களுக்கு அன்று எழுந்த கேள்வி இன்றும் தொடர்ந்தவண்ணமே உள்ளது. மக்களோடு நின்று பணியாற்றாத தலைவர்கள், ஈழத்தமிழருடைய போராட்டத்தில் பங்கெடுக்காதவர்கள் தமிழர்களுக்கு தலைவர்களாக திடீரென உருவெடுத்தமை, சர்வதேத்தின் அதீத தலையீடுகள், தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தமிழர் தாயகத்தில் உட்புகுத்திய நிகழ்ச்சி நிரல்கள் என நாலாபக்கத்திலிருந்தும் இறுக்கப்பட்ட ஒரு இனமாக தமிழ் மக்கள் இலங்கை தீவில் வாழ்ந்து வருகிறார்கள்.

இன்று தமிழ் மக்கள் சுயமாக எந்த விடயத்தையும் செய்ய முடியாத ஒரு இனமாக இறுக்கப்பட்டிருக்கிறது.தமிழர் தாயகத்தில் எது நடக்கவேண்டுமாகவிருந்தாலும் சீனாவின் தலையீடு, இந்தியாவின் தலையீடு, ஆட்சியாளர்களின் தலையீட்டின் ஊடாகவே எந்த விவகாரமாக இருந்தாலும் நகரவேண்டியிருக்கிறது.அந்த அடிப்படையில் தான் அண்மைக்காலமாக மாகாண சபை தேர்தல் தொடர்பான பேச்சுக்களை பார்க்க வேண்டியிருக்கிறது. அதிலும் கடந்த 17 ஆம் திகதி இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்ற தமிழ் ஊடக நிறுவன பிரதானி




களுடனான சந்திப்பின் போது இந்தியத் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா தெரிவித்த கருத்துக்கள் தற்சமயம் பேசுபொருளாக மாறியிருக்கிறது.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு இடையே ஒருமித்த நிலைப்பாடு இருந்தால் மாத்திரமே மாகாணசபை தொடர்பில் காத்திர மான நடவடிக்கைகளை இந்தியாவினால் முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும் என்றும் மாகாணசபையை வலியுறுத்தும் தமிழ் பேசும் அரசியல் கட்சிகள், சில சந்தர்ப்பங்களில் அந்த மாகாண சபை தேவையில்லையென்றும் தெரிவிக்கும் நிலைப்பாடு இருந்து வருவதாகவும் தெரிவித்திருக்கும் அதேவேளை, இவ்வாறான நிலையில் இவ் விடயத்தில் இந்தியாவினால் ஒருமித்த நிலைப்பாட்டை முன்னெடுத்து இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதில் சிக்கல் நிலை இருப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

1987 ஆம் ஆண்டு இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி 13 ஆவது அரசியல் திருத்தத்தின் கீழ் மாகாணசபை முறைமை நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது. இது தமிழ் மக்களுக்காகவும் தமிழ் மக்கள் வாழும் வடக்கு-கிழக்கு மாகாணங்களை முதன்மைப்படுத்தியே கொண்டுவரப்பட்டது. குறித்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியதன் பின்னர் முதன்முறையாக 1988 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 04 ஆம் திகதி நடைபெற்றது. இறுதியாக 2012 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெற்றது. அதேபோல், வட மத்திய மாகாணத்திற்கு (08.09.2012) சப்ரகமுவ மாகாணத்திற்கு (08.09.2012) மத்திய மாகாணத்திற்கு (21.09.2013) வட மாகாணத்திற்கு (21.09.2013) வடமேற்கு மாகாணத்திற்கு (21.09.2013)

08 ஆம் பக்கம் பார்க்க...



# Jaffna Super markt

**Lebensmittel aus Asien, Afrika,China und Orient**

எமது நிறுவனத்தின் 6 வது ஆண்டு நிறைவையும், தீபாவளி பண்டிகையையும் முன்னிட்டு




## சிறப்பு மலிவு விற்பனை!

01.10.2025 முதல்
31.10.2025 வரை
நான்கு வாரங்கள்
வாடிக்கையாளர்களுக்கு
நல் வரமாகும்

10 % முதல் 20% வீதம் வரை கழிவு விலையில்.
அல்லது

இரட்டைச் சலுகை!!!
**DOUBLE DEALS**

150 € மேல் கொள்வனவு செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கு
5 Kg பசுமதி அரசி இலவசம்

அனைவருக்கும் மெது இனிய தீபாவளி நல் வாழ்த்துகள்

அனைத்து மளிகைப் பொருட்களும் எம்மிடம் கிடைக்கும்.




Wolbecker str 16a. - 48155 Münster
(Eingang von Bremen Platz neben Parkhaus Ausgäng)

**Tel: 0179 2310 560**

அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



# அறிவு; ஆற்றலின் நுட்பமான பயணம் 02

தீபா ஶ்ரீதரன் (தைவான்)

## நம் உடல்கள் வெறும் உயிர்வாழ்வதற்காக மட்டுமல்லொ அறிவாற்றல் மேம்படுவதற்காகவும் பரிணாமடைந்தன

சுமார் 3.5 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, பூமியின் முதல் ஒருயிரணுக்கள்–புரோகாரியோட்டுகள்– பூமியின் ஆதிகாலப் பெருங்கடல்களில் தோன்றின. இந்த நுண்ணிய உயிரினங்கள் தங்களின் எரிபொருளுக்குத் தங்கள் சுற்றுப்புற வேதியியல் எதிர்வினைகளை நம்பியிருந்தன. இருப்பினும், அவற்றிற்கு ஆற்றலை அணுகும் திறன் குறைவாகவே இருந்து. எனவே அவை எளிய அமைப்புடன் இருந்தன. பின்பு சயனோபாக்டீரியாக்களின் தோற்றம் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அவை ஒளிச்சேர்க்கை (Photosynthesis) செய்யும் திறனைப் பெற்றன–சூரிய ஒளியைப் பயன்படுத்தி க்லுகோஸ் போன்ற ஆற்றல் நிறைந்த மூலக்கூறுகளை உருவாக்கின. இது பரிணாம வரலாற்றில் ஏற்பட்ட புரட்சிகரத் தருணம் என்றே கூறலாம். ஏனென்றால்



முதல் முறையாக, பூமிக்கான மிகுதியான ஆற்றலின் மூலதனமான சூரியனிடமிருந்து ஓர் உயிர் நேரடியாக ஆற்றலைப் பிடித்துக் கொள்ள முடிந்த வளர்ச்சி அது.

ஒளிச்சேர்க்கை பரவியபோது, முன்னர் அரிதான வாயுவாக இருந்த ஆக்ஸிஜன் அதிகரித்து வளிமண்டலம் மாறத் துவங்கியது. பூமியின் வளிமண்டலத்தின் இந்த ஆக்ஸிஜனேற்றம் ஏரோபிக் சுவாசத்திற்கு வழி வகுத்தது. இது காற்றில்லா செயல்முறைகளை விட அதிக ஆற்றலை அளிக்கும் ஒரு செயல்முறையாகும். ஆற்றல் அதிகரிக்க அதிகரிக்க உயிர் வடிவங்களின் அமைப்பு பிரமாண்டமானதாகவும் சிக்கலாகிக்கொண்டேயும் இருக்கும். எனவே உயிரணுக்கள் (Cells) நிபுணத்துவம் பெறவும், ஒன்றிணைந்து செயல்படவும், பல்லுயிரினங்கள் உருவாகவும் இது வழிவகுத்தது. ஆனால் இது ஒரு சீரற்ற மாற்றமல்ல. இதுவே ஆற்றல் பொருளாதாரம். (Energy economy in action)

சுமார் 540 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு கேம்ப்ரியன் வெடிப்பை (Cambrian explosion) எடுத்துக் கொண்டால் ஒப்பீட்டளவில் குறுகிய காலத்தில், உயிர்கள் பரந்த அளவிலான உடல் திட்டங்கள் மற்றும் செயல்பாடுகளாகப் பன்முகப்படுத்தப்பட்டது. ஏன்?

அதற்கு முன்பு, பெரும்பாலான உயிரினங்கள் எளிய, மென்மையான உடல்களுடனும் ஒரே மாதிரியான அமைப்புகளுடனும் இருந்தன. ஆனால் இந்தக் காலத்தில் திடீரெனச் சிப்பிகள், எலும்புக் கூடுகள், சிறப்பு உறுப்புகள், சிக்கலான நடத்தைகள் கொண்ட உயிரினங்கள் தோன்றின. சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, அதிகமான ஆக்ஸிஜன் அளவு, செழிப்பான உணவுக் களஞ்சியம் ஆகியவை உயர் ஆற்றல் தேவையுள்ள உயிர்களை ஆதரித்தன. அதாவது அதிகப்படியான ஆற்றல் சிக்கல்களை வளர்த்தது என்று பொருள் கொள்ளலாம். இங்கே சிக்கல் என்பது உடல் கட்டமைப்பு மற்றும் ஆற்றலைக் கையாளும் திறனில் உண்டான வளர்ச்சி என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இவ்வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகித்தது பாலின இனப்பெருக்கம் (Sexual reproduction). இது கேம்ப்ரியன் காலத்தில் தோன்றியது அல்ல–அதற்கும் முன்னரே, ஒன்றரை பில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஒற்றை உயிரணுக்களில் தோன்றிவிட்டது. ஆனால் கேம்ப்ரியன் காலத்தில் பன்மையுயிரி னங்களில் பரவலாக நிலை பெற்றது. ஏசெக்ஸ்/வல் இனப்பெருக்கம்






(Asexual reproduction) வேகமாகவும் குறைந்த ஆற்றலிலும் நிகழக்கூடியது. ஆனால் பாலின இனப்பெருக்கம் மிகப் பெரிய ஆற்றல் முதலீட்டைத் தேவைப் படுத்தியது: துணையைத் தேடுதல், சிறப்பு இனப்பெருக்கு உயிரணுக்களை உருவாக்குதல், பிள்ளைகளைப் பாதுகாத்தல் போன்றவற்றிற்கான ஆற்றல் தேவை. இது ஆற்றல் பொருளாதாரத்தில் அதிகச் செலவு போலத் தோன்றினாலும், பரிணா மம் இதனைத் தேர்ந்தெடுத்தது. ஏன்? பாலின இனப்பெருக்கம் அளித்த பலன் மிகப்பெரியது. மரபியற் பல்வகைமை (genetic diversity), மனித குலம் தழைத்துப் பெருகியதற்கான அடிப்படைக் காரணம். DNA–வை கலக்கி, புதிய பண்புகளை உருவாக்கி, உயிரினங்களை வேகமாகச் சூழலுக்கு ஏற்ப மாறிக் கொள்ளஉதவியது.

இதிலிருந்து நாம் அறிந்துகொள்ள வேண்டிய ஆழமான உண்மையென்னவென்றால், பரிணாமம் பெரும்பாலும் அதிக ஆற்றலைச் செலவழிக்கும் செயல்முறைகளையே ஆதரிக்கிறது, ஏனெனில் அவை நீண்ட காலத்துக்கான உயிர்தன்மை, தகுதித்தன்மை, சிக்கலான வளர்ச்சியை உருவாக்குகின்றன.

28 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்


Luckyfly
எமது
இனிய தீபாவளி
நல் வாழ்த்துகள்
Srilanka ab.
750€ -799€
40 KG LUGGAGE
SRILANKA
ROUND TRIP
SRI LANKA
MAXI
CAB SERVICE
Lanka
VAN SERVICE
GERMANY
AIRPORT
BOOK NOW
Allee str 38-40 44793 Bochum
CONTACT US
0234 2399032 | 0179 14 84892
INFO@LUCKY-FLY.DE | WWW.LUCKY-FLY.DE

மாதவி

# அடங்க மறுக்குதே மனம்





இன்னும் கொஞ்சத் தூரம் போக நிறைய இருக்கும். பொறுங்க ஐயா நான் நல்ல இடமாகப் பார்த்து நிற்பாட்டுகிறேன்.

அங்கை "நிறைய இருக்கு! " நிற்பாட்டவும் என்பதற்குள் அந்த இடம் கடந்திடும். நீங்கள் விடுமுறைக்கு இலங்கை சென்றால் பெரும்பாலும் அங்கு ஒரு தனியார் வாகனத்தை வாடைக்கு அமர்த்தி பயணிப்பீர்கள். அப்போது, தெருக்களில் இளநீர், ரம்புட்டான், மாம்பழம் இவற்றை விற்பவர்களைக் கண்டால் வாகனத்தை நிறுத்துங்கள் என்று சாரதியைக் கேட்கும் பொழுதுகளில் ஏற்பட்டும் அனுபவம் இவையாக இருக்கும்.

பெரும்பாலும் நாம் முடிவெடுத்து சொல்வதற்கு முன்போ, அல்லது அரை குறை மனதுடன் நாம் இருப்பதனாலோ. டக்கென்று வாகனத்தை மறிக்கச் சொல்லமாட்டோம். ஆனால் பயணம் முடியுமட்டும் அந்த இடத்தில் ரம்புட்டான் இருந்தது, இவன் நிற்பாட்டவில்லை, என்று ஒருமையில் அவனைத் திட்டித்தீர்ப்போம். எப்போதுமே நாமே கதாநாயகன் என்பதில் தீர்க்கமாக இருப்போம்.

இந்த அனுபவம் எனக்கு பல தடவை இருந்தபடியால், இம்முறை மலையகத்தில் ஒரு பயணம் சென்ற போது ரம்புட்டான் நிறை தெருவில் விற்பதைக்கண்டு வாகனத்தை நிறுத்தச் சொன்னேன். அவர் வழமை போல நிறுத்தாமல் ‘அங்கால் போக, இன்னும் அதிகம் இருக்கும் மலிவாக்கூட வாங்கலாம்‘ என்றான். நான் இந்தச்சாரதிமாரைக் கரைத்துக்குடித்தவன் என்பதால், இல்லை வானைத்திருப்பவும், நேரம் போனால் பறவாய்யில்லை பழத்தை வேண்டுவோம் என்றேன்.

அவன் முகத்தை திருப்பாமல் கடுகடுப்புடன் வானைத்திருப்பிக்கொண்டு கொஞ்சத்தூரம் ஓடி, நான் சொன்ன இடத்திலே நிறுத்தினான். பழங்களை வேண்டிக் கொண்டேன் பயணம் தொடர்ந்தது. அடுத்த வளைவில் எக்கச்செக்கமான பழங்களை வைத்து பலர் விற்றவண்ணம் இருந்தனர். வான் சாரதி வேண்டுமென்றே நான் பார்க்கட்டுமென்று மெதுவாக வாகனத்தை ஓட்டினான். நான் அவனை திசை திருப்ப ‘அந்த தூரத்தில் தெரியும் அருவிக்கு என்ன பெயர்? ‘ என்றேன். அவன் ‘waterfalls ‘ என்றான். பகிடி பிடித்தும் அவனைப் பிடிக்கவில்லை என்பதால் சிரிப்பை அடக்கிக்கொண்டேன்.

தூரத்தில் ஒரு ஆச்சியும், அப்புவும் வருவது தெரிந்தது, அப்பு தலையில் ஒரு பொதியோடு வருகிறார், ஆச்சி ஒரு தடியை ஊண்டியபடி அப்புவின் கரங்களைப் பற்றி நடக்கின்றார். இப்போ எமது வாகனத்திற்கு அருகாக அவர்கள் நெருங்கிய வண்ணம் இருந்தனர். அப்புவுக்கு கண்தெரியாது, ஆச்சிக்கு உடல்நலம் குறைவு, இருந்தாலும் ஆச்சி அப்புவுக்கு கண்ணாக கரம் பிடித்து வரும் காட்சி என்நெஞ்சைத் தொட்டு, கமராவையும் தொட்டது. வாகனம் அவர்களை விலத்துவதற்கு முன் மட மட என்று பல படங்கள் எடுத்தேன்.



அவர்கள் என் மனதைத் தொட்டதற்கு இன்னும் ஒரு காரணம் உண்டு. சுமார் 45 வருடங்களுக்கு முன் ‘உதவி“ என்று ஒரு சிலைவடித்தேன். கண்தெரியாத ஒரு மனிதன் தெருவில் நடக்க,அவன் தோழில் ஒரு முடவன் இருந்து வழிகாட்டுவது போன்றது. அச்சிற்பம் பரிசும் பெற்றது.

அவர்களை விலத்தி கால்மைல் தூரம் வந்துவிட்டேன். அவர்கள் மனதைவிட்டு விலகவே இல்லை. அவர்களது கையில் கொஞ்சக்காசை வைத்திருக்கலாம், ஏன் என்மனம் இப்படியாக இருக்கிறது. என என்னை நொந்தாலும் ‘அட இந்த வான்சாரதி சொன்னதும் என்ன நிறுத்தவாபோறான்‘, என நான் அவர்களுக்கு உதவாமைக்கு ஒரு காரணத்தை தேடி அமைதியானேன்.

வாகனம் சாரதிக்கு பிடித்த ஒரு தேத்தண்ணி கடையில் நிற்கிறது. நாம் எல்லோரும் தேத்தண்ணியுடன், பொல் ரொட்டியும் சம்பலும் சாப்பிட்டோம். சுப்பராக இருந்தது. பில் தந்தார்கள், பில்காசுடன் அதே அளவு காசு ரிப்ஸ் என்றும் கொடுத்தேன்.வாகனம் மீண்டும் பயணத்தை தொடங்கியது. சாரதி ‘ஐயா உங்களிடம் ஒன்று கேட்கவா?‘ என்றான். சொல் என்றேன். சும்மா அவன் கடமையைச் செய்தற்கு இவ்வளவு காசு ஏன் கொடுக்கவேண்டும் என்றான். அது அவன் அழகாக பரிமாறியதற்கு என்றேன். சாரதி அது அவன் தொழில் அது என்றான். அத்தோடு அவன் தன் மனதுக்குள் இருந்த வெடி ஒன்றை கொழுத்திப்போட்டான்.

ஐயா! ‘அந்தக்காசை அப்போ தெருவில் வந்த அந்த கண்தெரியாத அப்புக்கும் ஆச்சிக்கும் கொடுத்து இருக்கலாமே. அவர்கள் தலைமையில் சுமந்து போகும் அந்த தொழிலும், அவர்கள் உறவும் அழகு என்று தானே என்று விழுந்து விழுந்து படம் எடுத்தீங்கள்.‘ என்றான். என்னவோ எமது தவறை பிறர் சுட்டிக்காட்டும்போது வரும் கோவம் அது மிக மிக கேவலமாக இருக்கும். இதவரை மனதுக்குள் ‘அவன்‘ ‘இவன்‘ என்று பேசிய நான் சாரதியை வெளியாக சத்தமாக ‘நீ நான் வாகனத்தை அந்த இடத்தில் நிற்பாட்டச்சொன்னால் நிற்பாட்டியாய் இருப்பாய?. ‘ என்றேன். இன்னும் கொஞ்சம் போனால் இரண்டு பேருக்கும் கண்தெரியாத ஆச்சி அப்பு வருவர்கள் எண்டல்லவோ சொல்வாய் என்று என் தவறை அவன்மேல் சுமத்தினேன்.

ஐயா ஒரு ரம்புட்டானுக்கு அரை மைல் போனாப்பிறகும் ரவுண்டடிச்சு திருப்பச்சொல்லி வந்து வாங்கி உங்களுக்கு, ஆச்சி அப்புவிடம் திருப்பச் சொல்ல மட்டும் மனம் விடவில்லையே என்றான். நான் அவனுக்கு பதில் சொல்ல விரும்பவில்லை. என்னிடம் பதிலும் இல்லை. எனக்கு திடமான ஒரு முடிவை விரைவாக எடுக்கும் திறன் எப்ப குறையத் தொடங்கியதோ அப்போதே பிறர்மீது குறையைச் சுமத்த முனையும் குணமும் அதிகரித்ததுவிட்டது என்பது எனக்கு புரிந்தது.

இப்போ சாரதியை அவன் இவன் என்று மனம் நினைக்கவில்லை. தம்பி என்று அழைத்து 2 கி.மீ வந்திட்டோம் வானைத் திருப்ப முடியுமா அந்த ஆச்சி அப்புவிடம் என்றேன். ஐயா திருப்பவேண்டாம் நீங்கள் மனம் விரும்பினால் இன்னும் ரம்புட்டான் இருக்குதோ இல்லையோ ஆனால் அவர்களைப்போல் பலரை உங்களால் காணமுடியும் என்றான்.

பிற்காலத்தில் நம்பியார் கூட வில்லனாக நடிப்பதை விட்டு நல்லவனாக நடித்தார். உண்மையிலும், நல்லவன் என்பதை வாழ்விலும் உணர்த்தினார். எனது பிற்காலம் எதற்குள்ளும் அடங்க மறுத்தது. விடுமுறை முடிந்து வீடு வந்தேன். சுவரில்மாட்டி இருந்த எனது பரிசு பெற்ற சிற்பத்தின் படம் பரிகாசித்தது.




ASIEN SUPERMARKT
TTS
TTS Brothers GmbH & Co.KG *Lebensmittel *Seafood *Textilien *Schmuck
Germany நாட்டில் 34 ஆண்டுகளைக் கடந்த ஒரே நிறுவனம்



உங்கள் வீட்டுத் தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள் மற்றும் ஆடை அணிகலன்களுக்கும் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.



நம்பிக்கை! நாணயம்!! கைராசி!!!

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel: 0231 819288

Wolbecker 27
48155 Munster
Tel: 0251 13 65 194

Helmholtz Str 11 |
46045 | Oberhausen
Telefon: 0208 20 28 29




# யேர்மனியில் வெளிநாட்டவர்களுக்கு எதிரான கட்சியின் வளர்ச்சி!

**யேர்மனியின் மாநிலத் தேர்தல் முடிவுகள்... யேர்மனியில் வலது சாரிகட்சியின் பெருவெற்றி...**



வ.சிவராஜா
(ஆசிரியர் மண் சஞ்சிகை)
யேர்மனி

14.09.2025 ஞாயிற்றுக்கிழமை, ஜேர்மனியின் 16 மாநிலங்களில் ஒன்றான (NRW) நோத்றைன் வெஸ்பாளின் மாநிலத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் நடைபெற்றதில் ஆளுங்கட்சி தனது இருப்பை தக்கவைத்துக் கொண்டுள்ளது. என்றாலும், ஒரு குறிப்பிட்ட கட்சியான ( A&D ) மக்களிடையே தொடர்ந்து ஆதரவு பெருகி வருவதையும் தேர்தல் முடிவுகள் காட்டியுள்ளன.

ஜேர்மனியின் அதிக மக்கள்தொகை கொண்ட மாகாணத்தில் North Rhine-Westphalin தேர்தல் நடைபெற்றது.

தேர்தலில் சேன்ஸலர் பிரெட்ரிக் மெர்ஸ் சார்ந்த Christian Democratic Union (CDU) 33.3 சதவிகித வாக்குகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளது. விடயம் அதுவல்ல, புலம்பெயர்தல் எதிர்ப்பு வலதுசாரிக் கட்சியான Alternative for Germany (AfD) கட்சி நல்ல முன்னேற்றம் கண்டுள்ளதுதான் இந்த தேர்தலில் கவனிக்கத்தக்க விடயம்.

அதாவது, இந்த தேர்தலில் என்ன நடந்தாலும், அது ஆளும் அரசில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தப்போவதில்லை. அவ்வகையில், ஆளுங்கட்சி தனது இருப்பை தக்கவைத்துக்கொண்டுள்ளது உண்மைதான் என்றாலும், வலதுசாரிக் கட்சியான Alternative for Germany (AfD) கட்சிக்கு மக்களிடையே ஆதரவு கணிசமாக பெருகிவருகிறது என்ப




தையும் இந்த தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன. இன்று அபரிமிதமான வளர்ச்சியைக் கண்டுள்ள அக்கட்சி, நடந்து முடிந்த மாகாணத் தேர்தலில் 14.5 சதவிகித வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்தில் உள்ளது. ஆக, அக்கட்சிக்கு மக்களிடையே ஆதரவு பெருகிவரும் நிலையில், ஆளும் கூட்டணியிலுள்ள கட்சிகள் மக்கள் மனதில் இடம்பிடித்தாக வேண்டிய நிலையில் உள்ளதை மறுப்பதற்கில்லை.

அடுத்தது ஏனைய பிரதான கட்சிகளான SPD மற்றும் Greenகட்சிகளின் வாக்குவீதம் சரிவு கண்டுள்ளன இவை இரண்டும் 2ம் 3ம் நிலையிலிருந்து 3ம் 4ம் இடங்குளுக்குப் பின்தள்ளப்பட்டிருக்கின்றன. அதை ஆளுங்கட்சியினரும் நன்கு புரிந்துகொண்டுள்ளார்கள் என்பதும் தெரிகிறது. காரணம், North Rhine-Westphalia மாகாணத்தில் Minister-President பொறுப்பு வகிக்கும் Hendrik Wüst இந்த தேர்தல் முடிவுகள், நாம் இந்த தேர்தலில் வெற்றி பெற்றிருந்தாலும்கூட, ஓய்வெடுக்க முடியாது, தொடர்ந்து கடினமாக உழைத்தாக வேண்டும் என்பதையே காட்டுகின்றன என்று கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இத்தேர்தலில் 2ம் நிலைக்கு வந்துள்ள தீவிர வலதுசாரி A&D கட்சியானது முற்றுமுழுதாக வெளிநாட்டவர்களுக்கு எதிரான கட்சியாகும். வெளிநாட்டவர்களின் குடியேற்றம், வேலைவாய்ப்பு, கல்வி, பொருளாதாரம் போன்ற விடயங்களில் இந்தக்கட்சியானது வெளிநாட்டவர்களுக்கு எதிரான கட்சியாகவே செயற்பட்டு வருகின்றது.

யேர்மனியில் இலங்கைத் தமிழர்கள் கூடுதலானோர் வாழும் மாநிலமும் இது தான். ஆதலால் தமிழர்கள் மத்தியில் மட்டுமல்ல அனைந்து வெளிநாட்டவர்களின் மத்தியில் ஒரு வித வெறுப்பு தோன்றியிருக்கின்றது. எதிர்காலத்தில் எப்படிப்பட்ட மாற்றங்கள், எதிர்வினைகள் வந்துசேரும் என்று தெரியாத நிலையே இருந்து வருகின்றது. காலப் போக்கு நிலமைகளைப் பொறுத்திருந்து பார்ப்போம்..

NRW மாநிலத் தேர்தல் முடிவுகள்..

CDU: 34,6 Prozent (-0,3 Prozentpunkte im Vergleich zur Wahl 2020)
SPD: 21,9 Prozent (-2,4)
Grüne: 12,4 Prozent (-7,6)
AfD: 16 Prozent (+10,9)
Linke: 5,1 Prozent (+1,3)
FDP: 3,2 Prozent (-2,4)
Sonstige Parteien und Wähler grup pen: 6,8 Prozent (-0,3)
Wahlbeteiligung: 58,5 Prozent





K.K.L.
Textilien Schmuck Haushaltsware
உங்கள் மனம்போல் தெரிவு செய்ய,
விதம் விதமான ஆடைகள் ,
இன்றே எம்மை நாடுங்கள்.
என்றும் புது வரவுகள்



Rheinische str.56 44137 Dormund | Tel: 0231 96 98 6610 | https://m.facebook.com/ kkl.textillenschmuck



பத்து வருடங்களின் மீண்டும் பிரசுரமாகும் கட்டுரை. இன்றும் உயிர்ப்புடன் உள்ளது.

# எமது வீட்டில் அதிகம் அடிபட்ட நெல்லிமரம்

# நோய்களை நெருங்கவிடாத நெல்லி!

வளவின் பின்வேலிக்கு அண்மையாக அந்த மரம் நின்றது. நெடித்துயர்ந்த மரம். புத்து பதினைந்தடி உயரத்தில் நாலா பக்கமும் கிளைகளைப் பரப்பி நின்றது. இலைகளைக் கூட்டிலை என்போம். மத்தியில் காணப்படும் நடு நரம்பின் இரு பக்கங்களிலும் சீறிலைகள் ( Leaflets ) ஒழுங்காக அடுக்கப் பட்டிருப்பதைக் காணலாம். சீறிலைகள்.

அடுக்கப்பட்ட விதத்தினை சிறைப்பிரிப்பான் ( Pinnate ) ஒழுங்கு என்பார்கள். கூட்டிலையின் காம்புகள் மிகவும் குறகியவையாக உள்ளமையாலே இலைகளின் கக்கங்களிலே குலை குலையாகத் தோன்றும் காய்கள் இலைக் காம்புகளில் இருந்தே தோன்றுவது போலத் தெரியும். காய்கள் துளிர்ப்பச்சை நிறமுடையவை. கோள வடிவானவையாகப் பரப்பிலே ஆறு நீளப்பக்கமான சால்களைக் கொண்டவையாக இலைகளுடன் இலையாய் மறைந்து காணப்படும்.

உயரமான மரம் மரத்திலேறிக் காய்களைப் பிடுங்குவது எனது கூட்டாளிகளுக்கு அவ்வளவு சாத்தியமில்லை. நன்றாக முற்றிய காயைச் சாப்பிட்டாலதான் அதன் சுவையை அனுபவிக்கலாம். சாப்பிடும் போது சற்றுக் கசக்கும். பின்னர் தண்ணீர் குடித்தால் தொண்டையுள் இனிப்பாக இருக்கும். அது ஒரு தனிச்சுவை. பழம் பழுத்தால் கீழே விழும்தான் அப்பொழுது அதன் தனித்தன்மையான சுவையும்



வீழ்ந்து விடும். வீதியால் போகும் பெடியள் கூட்டத்திற்கு சடைபரப்பி நிற்கும் எமது நெல்லியைக் கண்டால் நாக்கில் ஜலம் ஊறவே செய்யும். தமக்குத் தெரிந்த வித்தையைக் கையாண்டு ஒரு முயற்ச்சியை மேற் கொள்ள ஆவல் எழும் மாங்காயாக இருந்தால் கல்லால் அடிக்கலாம் இது சிறிய நெல்லிக்காய். எங்கே உள்ளது என்பது கூடத் தெரியாத நிலை ஆகவே குருடன் பெண்டாட்டிக்கு அடித்தமாதிரித்தான். கோப்புகளை இலக்குவைத்து கட்டையான தடிகள் பறக்கும் என்றால். பல்வேறு முற்றிய நிலைகளிலே காய்கள் பொலு பொலு எனக்கீழே விழும்.



அமரர்
பொ.கனகசபாபதி
(முன்னாள் அதிபர் மகாஜனாக் கல்லூரி)

வேலியில் பொட்டு வைத்து மெல்ல உள்ளே புகுந்து தமக்கத் தேவை யானதை அவர்கள் எடு த்தக்கொண்டு போவார்கள். பொட்டுக்கள் அவர்கள் தலையைக்கண்டால் அம்மவின் வசவு நிச்சயம்.

ஆதியமனதன் என்ற கடையெழு வள்ளலில் ஒருவர் தனக்கு அன்பளிப்பாகக் கொடுத்த நெல்லிக்காயினை ஔவையாருக்கு கொடுத்தமை தமிழ் இலக்கியத்தில் வருகின்ற ஒரு கதை. மற்றைய கடையெழுவள்ளல்களின் கொடையிலே ஒரு அசட்டுத்தனம் இருப்பதை எமது பிள்ளைகள் எடுத்துகாட்டுவது உண்டு. ஆனால் அதியமானின் கொடையில் ஓர் அர்த்தம் உள்ளதை விஞ்ஞான ரீதியாக உணரமுடிகிறது. நெல்லிக்காயில் முதுமையை அண்டவிடா மல் தடுக்கும் பதார்த்தம் ஒன்று (Ae jubenating) உள்ளது என்பது இன்றைய உணவியல் விஞ்ஞானிகள் கண்டு கொண்ட உண்மை.

எமது குருதியின் பாய்பொருளிலே பல்வேறு கொலஸ்ரோல் வகைகளிலே ( Triglyceride, Lipoprotein Cholestrol) ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வைகையோ அதிகளவிலே காணப்படுமாயின் அந்த நிலையினை அதீத கொழுப்புடமை ( Hyperlipidaemia) என்கிறார்கள். இதுவேதான் உடல் முதுமை நிலை எட்டுவதற்குக் காரணமாகின்றது. இக்கொலஸ்ரோல் வகைகளை ஒட்சியேற்றி செயல் இழக்கவைக்கும் திறன் நெல்லிக்காயில் உள்ள அப்பதார்த்தத்திற்கு உள்ளதாம். அகவே ஔவையார் முதுமை அடையாமல் இளமையுடன் தமிழ்த்தொண்டு செய்யவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தமக்கு வந்ததை அதியமான் தானம் செய்தது அவரின் வள்ளல்த்னமையைக் காட்டவே செய்கின்றது. ஆடுகின்ற மயிலைக்கண்டு அது குளிரால் நடுங்கிற்று என்று எண்ணி தனது போர்வையை வள்ளல் பேகன் கொடுத்தார் என்பதும், பற்றிக்கொண்டு வளர தண்டு தளையில்லாமல் காற்றில் அலைந்தாடிய முல்லைக் கொடிக்குத் தன் தேரினை வள்ளல் பாரி கொடுத்தார் என்பதும் சிலருக்கு இழக்காரமாகத் தெரிகின்றது. ஆண்மையில் மழை வரவுள்ளது என்ற ஆனந்தத்தில் ஆடுகிறது என்பது அந்த வள்ளலுக்குத் தெரதியவில்லையா? காற்றில் அசைந்தாடும் முல்லைக் கொடிக்கு ஒரு தளையினை நட்டுவிட்டு பிரச்சினையைத் தீரத்துக்கொள்ளாமல் தேரினை அங்கேயேவிட்டு பாரி செல்ல வேண்டும்.?

28 ஆம் பக்கம் பார்க்க...

BCN TRAVELS
Consulting Network.ug
inh.Rasan.Sivalingam
Canada visa, India one year, 5 years. Visa Srilanka Visa
72 மணித்தியாலத்தில் பெற்றுத் தரப்படும்
உங்கள் விமானப் பயணங்கள் என்றும் சிறப்பு விலையில்



இங்கிலாந்து (UK) விசாக்களுக்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்
MONEY TRANSFER
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
Bank: conslting Network. UG
Targo bank
IBAN DE90 30020900 5330 5840 82
BIC: CMCIDEDD
bcntravels@hotmail.de
consultingnetwork@hotmail.de
Rheinische str.72-44137 Dortmund
Tel: 0231-108 763 61 | Mobile: 0163 871 43 69 | Fax: 0231 1087 6362| Web: Bcn-travels-dortmund.com







## பல தேசங்களில் இருந்தும் பல்லாயிரம் மக்கள் கூடும் பெருவிழா

# டோட்மூண்ட் தமிழர் தெருவிழா

















**கவிதா லட்சுமி (நோர்வே)**

ஐரோப்பிய நாட்டில் மிக முக்கியமான முன்னெடுப்பு ஜெர்மன்- டோட் முன் நகரில் நடத்தப்படும் தெருவிழா என்பது மிகையல்ல. இம்மூன்று (05,06,07 - 09.2025) நாட்களில், பல தேசங்களில் இருந்தும் பல்லாயிரம் மக்கள் கூடும் பெருவிழா இது.

தமிழ்ப் பாரம்பரியக் கலை, உணவுப் பண்பாடு,உடைகள், ஆவணப்படுத்தல்கள், நூல்கள், தாவரங்கள் என அனைவரையும் இணைக்கும் விழா இத்தெருவிழா.

தத்தமது கொள்கைகள், நிலைப்பாடுகள், அரசியல் பிரிவுகள், முரண்பாடுகள் கடந்து தமிழர் நாம் சங்கமிப்பது என்பது அத்தனை சுலபமான விடயமாக இருப்பதில்லை. இங்கே எந்த குழுவும் எந்த நபரும் முதன்மை படுத்தப்படுவதில்லை. கலை கற்றுக் கொண்டிருக்கும் மழலைகளில் இருந்து சிறந்த கலைஞர்கள் வரை மேடையைச் சிறப்பு செய்கின்றன. எம் சிறுவயதில் பெரும் உவப்பாக இருந்த திருவிழாக்களின் சிறப்பையும், மதம் தாண்டி ஒன்றினையும் சிறப்பையும் ஒருமித்துக்கொண்ட விழா, இத் திருவிழா! இப்பெரும் கூடலைப் பல வருடங்களாக நிகழ்த்தி காட்டிக் கொண்டிருக்கும்சபேசன்வி. அவர்களுடைய பணி எமது சமூகத்தில் பெரும் எடுத்துக்காட்டு என்பதில் ஐயமில்லை. மேலும், திருவிழா தொடங்கிய நாளன்று பொறுப்பாளரான சபேசன் தனது காலை முறித்துக் கொண்டு, நடமாட முடியாத நிலையிலும், இவ்விழா மாபெரும் விழாவாக நடந்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, தலைமை முன்நிற்க முடியாத சந்தர்ப்பத்திலும், எடுத்துக் கொண்ட விடயம் திறம்பட நடந்து கொண்டிருப்பது இதன் தனிச்சிறப்பைக் காட்டுகிறது. இவையனைத்தும் தகுந்த, தலைமைப் பண்பையே சுட்டி நிற்கின்றது.

தமிழ் மக்களும், பிற நாட்டு மக்களும், குடும்பமாக் கூடி, நின்று பேசி, கண்டு, கேட்டு, உண்டு, மகிழ்ந்து, களித்து, நட்புக் கொண்டாடி, ஆடி மகிழும் பெரும் திருவிழாவில் நாங்களும் பங்கு கொள்வதில் பெரு மகிழ்ச்சி. சாதாரணமாக புலம்பெயர் தேசங்களில் கிடைக்க பெறா உணவுகளான அப்பம், தோசை, பல வகை புலவுச்சோறு, பனங்காய் பணியாரம், மரவள்ளி, கிழங்கு, இளநீர், அச்சாறு, மற்றும் கள்ளுக்கடை பலவித பலகாரங்கள் இங்கே கிடைப்பது கொண்டாட்டம்தான்.

புடவைகளுக்கும் அணிமணிகளுக்கும் பஞ்சமில்லை. சூடான தேநீர் அன்பும் நன்றியும் சபேசன் மற்றும் ஜேர்மன் தமிழ் மக்கள்.

**“வெள்ளத்து அனைய**
**மலர்நீட்டம் மாந்தர்தம்**
**உள்ளத்து அனையது உயர்வு.“**
**(குறள் - 595)**

டோட்மூண்ட் மாநகரில்....
தமிழர் அரங்கம்

சனிக்கிழமை 15.00- 18.00
திரையிசை நடனம்
(Cinimatic Dance)

கீபோர்ட் (Keyboard)
வெள்ளிக்கிழமை 18:00-19:00
அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது.சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை இணைந்து கொள்ளலாபம்
Für Kinder und Jungendliche und Erwachsene!
6€ Pro Stunde

வெள்ளிக்கிழமைகளில்
Jeden Freitag

தமிழர் அரங்கம்
Rheinische Srt.76-80
44137 Dortmund
Info:0151 633 633 33
0178 146 006 3

தமிழ் மொழி (Tamillsche Sprachunterricht)
வெள்ளிக்கிழமை 16:00-17:45
Free
அ ஆ இ ஈ உ
சிறார்களுக்கும்,இளையோர்களுக்கும், எளிமையான முறையில் தமிழ் கற்பிக்கப்படும்.
Für Kinder und Jungendliche!Auch speziell jugendliche, die sich mit der tamilische Sprache nicht auskennen

யேர்மன் மொழி (Deutsch für Anfänger / Innen)
ICH LERNE DEUTSCH
6€ Pro Stunde
வெள்ளிக்கிழமை 17.45 -19.15
யேர்மன் மொழியில் பேசவும் எழுதவும் கற்பிக்கப்படும் யேர்மன் குடியுரிமை பெறுவதற்கு பயன் உள்ளதாக அமையும்

அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# எங்கட ஆச்சி 07







காரைக்கவி
கந்தையா
பத்மானந்தன்

முந்தி எங்கட ஊரில மாடு வளத்தவையின்ர வீடுகளிலை அனேகமாக மத்து இருக்கும். தயிரைக் காலமையில இந்த மத்தால கடைஞ்சுதான் வெண்ணெய் எடுக்கிறவை. வெண்ணெய் எடுத்து மிஞ்சிற கொழுப்பில்லாத தயிரைத்தான் மோர் எண்டு சொல்லுறவை.எங்கட ஆச்சி கையாலதான் ரெண்டு உள்ளங்கையளுக்கும் இடையில மத்தைப் பிடிச்சுக்கடையிறவ. சிலர் மத்தைச் சுத்திறதுக்கு கயிறைப்பாவிக்கிறவை. எங்கட வெளிநாட்டில உள்ளவை புரொசெசரில போட்டு அடிச்சா டக்கெண்டு வெண்ணெய் பிரிக்கலாம் மத்தால கடையிறது வீண் வேலை எண்டுவினம்.

எங்கட ஆச்சி மத்தால தயிர் கடையிறது உடம்புக்கு நல்ல பயிற்சி எண்டுவா. கைத் தசையளுக்கு நெஞ்சுத்தசையளுக்கு நல்ல பயிற்சி எண்டுவா. குறிப்பா பெண்டுகளுக்கு முலை தொய்யாது முலை சம்பந்தமான கண்ட கிண்ட வருத்தம் ஒண்டும் வராது எண்டுவா. ஆச்சி சொல்லுறது உண்மை தான் ஏனென்டால் அவ கடைசிவரையும் உள்சட்டை எண்ட பிறா போடாம இருந்தவ. உண்ணான அவவுக்கு அது தேவைப்பபடேல்லை.

அது மட்டுமில்லை குந்தி இருந்து மத்தால தயிர்கடையிறது இடுப்புக்கு காலுக்கு எல்லாம் நல்ல பயிற்சி. மூட்டு வருத்தம் வராது இடுப்பு எலும்பு நல்ல பலமா வரும். உப்பிடி இடுப்பு நல்ல பலமா இருந்தா வயித்தில பிள்ளை இருக்கேக்கை பாரமா இருக்காது அதோட கஸ்ரப்படாம பிள்ளைப் பெறலாம் எண்டுவா.



முந்தி இப்பிடிப் பலதும் பத்துமான வேலைகளை வீடுவழிய செய்த படியால முந்தி எங்கட பெண்டுகள் நல்ல ஆரோக்கியமா மட்டுமில்லை அஞ்சாறெண்டு பஞ்சிப்படாமல் பிள்ளையளைப்பெத்து வளத்து ஆளாக்கினவை எண்டுவார் அப்பு. இப்ப ஒண்டைப் பெறுகிறதுக்கே முக்கு முக்கு எண்டு முக்குகினம் எண்டுவார்.

உந்த தயிரால மத்து கடையிற விசயம் எங்கட புராணத்திலையும் வருகுது. தேவர்களும் அசுரர்களும் மேரு மலையை மத்தாகவும் வாசுகி எண்ட பாம்பைக் கயிறாகவும் பாவிச்சு பாற்கடலைக் கடையேக்கை அவங்கள் போட்டி போட்டு கடைஞ்ச வேகத்தில வாசுகி ஏலாம நோவில கத்தி நஞ்சைக் கக்கினதெண்டும் அந்த நஞ்சைச் சிவபெருமான் தன்ர கண்டம் எண்ட கழுத்தில எடுத்து வைச்சவராம். அதால அவற்றை கழுத்து நீலம்பாரிச்சு இருந்ததால திருநீலகண்டர் எண்டு பெயர் வந்தது எண்டு முந்தி அப்பு சின்ன வயசில சொன்ன ஞாபகம் இருக்குது.

திருநீலகண்டப்பதிகம் பாடினா வருத்தங்கள் குறையும் தற்செயாலா வருத்தங்கள் வந்தாலும் அந்த வருத்தங்களால வாற விளைவுகள் குறையும் இல்லாட்டில் இல்லாமல் போகும் எண்டது சைவர்களின் நம்பிக்கை எண்டு ஆச்சி நெடுகவும் சொல்லுறவ.

உந்தப் பாற்கடலைக் கடைஞ்ச கதையை இளங்கோவடிகள் நல்ல வடிவாச் சொல்லுறார் எண்டு அப்பு சொன்ன ஞாபகம்.

> **“வடவரையை மத்தாக்கி வாசுகியை**
> **நாணாக்கிக் கடல்வண்ணன்**
> **பண்டொருநாள்**
> **கடல்வயிறு கலக்கினையே**
> **கலக்கியகை அசோதையார்**
> **கடைகயிற்றால் கட்டுண்கை**
> **மலர்க்கமல உந்தியாய் மாயமோ**
> **மருட்கைத்தே“**

> **உந்தக்கதையைக் கம்பரும்,**
> **“மத்து மந்தரம் வாசுகி கடை**
> **கயிறு அடை தூண்**
> **மெத்து சந்திரன் சுராசுரர்**
> **வேறு வேறு உள்ள**
> **கொத்து இரண்டு பால் வலிப்பவர்**
> **ஓடதி கொடுத்து,**
> **கத்து வாரிதி மறுகுற, அமிழ்து எழக்**
> **கடையின்“**

எண்டு அகலிகையைப்பற்றிக் கதைக்கேக்கை கதைக்கிறார் எண்டு ஆச்சி சொல்லுறவ. கம்பர் இன்னும் கன இடங்களில உந்த மத்து பற்றிய விசயங்களை கதைக்கிறார். இதுமாதிரி மத்து பற்றிய செய்தியள் சீவகசிந்தாமணி மாதிரி பழைய இலக்கியங்களில இருக்கெண்டு எங்கட ஆச்சி சொல்லுறவ.

நாங்கள் இப்ப மறந்து போன விசயங்களிலை உந்த மத்தும் ஒண்டு. இப்பத்தே பெடி பெட்டையளை மத்து எண்டால் என்ன எண்டு தெரியுமோ எண்டு கேக்கேக்கை அதுகள் தெரியாமல் முழிக்கேக்கை போட்டு மொத்த வேணும் போல இருக்கும்.





பேராசிரியர் என். சண்முகலிங்கன்- இலங்கை

## நேர்த்தி



”நேர்த்தி” என்ற சொல் தோற்றம், அமைப்பு அல்லது செயல்பாட்டில் உள்ள ஒழுங்கு அல்லது அழகைக் குறித்து நிற்பது – என வெற்றிமணி இதழில் முன் சில நேர்த்தியை கண்டோம்.

இந்த இதழில் 35 ஆண்டுகளுக்குப்பின் வரலாற்றுச் சிறப்பு மிக்க எங்கள் ஈழத்து மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் நிமிர்ந்த, எங்கள் ஆலய பண்பாடு கண்ட கலைப்பெருவடிவமான. நேர்த்தியான சப்பறக் காட்சி பகிர்வாகின்றது.அத்துடன்

எங்கள் கண்ணகை ஆய்வுப்பயணத்தில் கேரள கொடுங்கல்லூர் பகவதி அம்மன் கோயில் வளாகம் எங்கணும் நேர்த்தியாய் நெடிதுயர்ந்து நின்ற அடுக்கு தீபங்கள் நெஞ்சிலும் எங்கள் கமராவிலும் பதிவாகும். அதுவே இன்று உங்களுக்கான வெற்றிமணி நேர்த்திப் பகிர்வுமாகும்.

’எங்கள் நேர்த்திகளில் அம்மனுக்கு மிகவும் பிடித்தது எண்ணெய் தீப வெளிச்சம்’ – அடியவர்களின் பகிர்வு அது. எங்கள் ஆலயங்களிலும் முன் போல் எண்ணெய் விளக்கொளி எங்கணும் பரவ நெஞ்சம் அவாவும்.

– படத்தில் பேராசிரியர் என். சண்முகலிங்கன் பேராசிரியர் பக்தவத்சல பாரதியுடன்)

NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை

Nandy's Catering & Partyservice

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம்.
இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுகளையும் தயாரித்து வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!

உணவு விநியோகம் பரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிட்டுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்.

தொடர்புகளுக்கு: 0173-7424955
0211-7691974
www.Nandys.de | email: info@nandys.de

அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்




அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்








கலாசூரி
திவ்யா சுஜேன் (இலங்கை)

# இது ஓர் தேன்மார்க்க புரி என்ற சுகானுபவத்தைத் தந்தது டென்மார்க் பயணம்

ஆழ் கடல் அமைதியும், ஆரத் தழுவும் தென்றலும், தொட்டுத் தொட்டுப் பேசும் மழைச் சாரலும்...

ஆஹா ! இது ஓர் தேன்மார்க்க புரி என்ற சுகானுபவத்தைத் தந்தது டென்மார்க் பயணம்.

40 ஆண்டுகளை அண்மிக்கும் நடனப் பள்ளியாக டென்மார்க்கில் விளங்கும் கீதாலயம், அவர்களின் அரங்கேற்ற நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக அழைத்து அன்பு செய்தது. 15 ஆண்டுகளின் பின்பு நிகழும் அரங்கேற்ற நிகழ்வு இது. கீதாலய இயக்குநர் திருமதி மகாலக்ஷ்மி சத்தியமூர்த்தி அவர்களின் மாணவி சிவதர்ஷினி பாஸ்கரன் அவர்கள் அரங்கேற்றம் கண்டு 25 ஆண்டுகளின் பின்பு அவரது குடும்பத்தினரான அபிஷெனா, அபிஷர்ணி இருவருக்கும் தனது முதலாவது அரங்கேற்றத்தை நடத்துகிறார். ஆதலால் இந்த அரங்கேற்றம் கீதாலயத்திற்கு மிக முக்கிய நிகழ்வாக அமையப் பெற்றது. அனைத்துப் பணி களையும் நேர்த்தியாக முன்னின்று நடாத்திக் கொண்டிருந்தார் கீதாலயத்தின் தலைவர், ஆசிரியர் திருமதி கிருஷ்ணபிரியா சத்தியமூர்த்தி கோபிநேசன். கீதாலய வளர்ச்சியில் பெரும் பங்கு இவர்க்குண்டு. இசையும்,லயமும், முகாமைத்துவமும் தெரிந்த நல்லாசிரியர். தாயகத்துப் பெருமை சொல்லும் நயினைத் தீவினை டென்மார்க் தீவில் காணும் வகையில் அரங்கேற்றம் அமைந்திருந்தது. அரங்கு நிறைந்த ரசிகர்கள், இசை வழங்க இளங் கலைஞர்கள், செயற்கை நுண்ணறிவில் தம் கற்பனையறிவை ஊற்றி காணொளி அமைப்புச் செய்த நுண்ணறிவாளர்கள், லயக்ஞானமுள்ள ஆடல் நாயகிகள் என இனிதே அமைந்தது அரங்கேற்றம்.

அதனைத் தொடர்ந்து 2 நாட்கள் கீதாலய மாணவிகளுக்கு பயிற்சிப் பட்டறை வழங்கிய இன்னுமொரு இனிய அனுபவம்







கிடைக்கப் பெற்றது. அன்பினாலானது இவ்வுலகு என்ற என் ஐயன் வாக்குப் போல அன்று அறிமுகமான ஆடல் மழலைகள் எல்லாம் எனைத் ஆரத் தழுவிக் கொண்டு அன்பு செய்தனர். பாரதியின் புதிய ஆத்திச்சூடி வரிகளை இணைத்து அமைக்கப்பட்ட புதிய ஆத்திசூடி அலாரிப்பு 2018 ஆம் ஆண்டு முதல் 200 ற்கும் மேற்பட்டோருக்கு கற்றுக் கொடுத்திருந்தாலும் அன்று இவர்களுக்குக் கற்றுக் கொடுத்தது வித்தியாசமான அனுபவத்தினைத் தந்தது. பாரதியின் மந்திரச் சொற்களை மனமேந்தி, உயிருருக, உணர்வுறி நம் தெள்ளுற்ற தமிழமுதின் சுவைகூட்டி நான்



சொல்ல, அதன் தன்மை கெடாது மிக லாவகமாக டெனிஷ் மொழியில் உடனுக்குடன் மொழி பெயர்த்து உதவினார் கிருஷ்ணப்பிரியா கோபிநேசன் அவர்கள்.

அக்கணம் நம் அருந்தமிழை வெளிநாட்டவரும் வணக்கம் செய்யும் வகையுணர்ந்து நெகிழ்ந்தேன். எனக்கு எப்போதும் மிக நெருக்கமான நட்டுவாங்கம்,அபிநயம் இரண்டினையும் பற்றிய விரிவுரைகளையும் நாடாத்த முடிந்தது. பங்குபற்றியோர் முக மலர்வும் என்மீது கொட்டிய அன்பும் நிறைவான பயிற்சிப் பட்டறைக்கு உறுதிமொழி தந்தது.

டென்மார்க் ஐ அண்டிய நாடுகளான நோர்வே, ஸ்வீடன் நாடுகளுக்கும் என் பயணம் அமைந்தது. நோர்வே என்றதுமே கவிதா லக்ஷ்மியை எண்ணத் தோன்றும். காலாசாதனா நடனப்பளியை நிறுவி 25 ஆண்டுகளை அண்மிக்கும் இவரது ஆக்கங்கள் தமிழ் தாங்கி நிற்கும். இலக்கிய அறிவோடு நாட்டியத்தை அணுகும் வரம் பெற்ற கவிதா லக்ஷ்மி அவர்களின் சந்திப்பு நல்லின்பப் பொழுதாக அமைந்தது.

இலங்கை இந்திய கலைஞர்கள் பலருடன் பணியாற்றி காலத்தின் தேவை உணர்ந்து செயல்படும் தமிழ் ஒபெராவின் அமைப்பாளர், பெண் ஆளுமை வாசுகி ஜெயபாலன் அம்மா அவர்களையும், நோர்வேயில் தஞ்சாவூர் பாணியை அடுத்த தலைமுறையினர்க்குக் கடத்தும் தமிழினி ஆசிரியர் அவர்களையும்,நோர்வேயில் மூத்த நடன ஆசிரியரான திருமதி மைதிலி ரவீந்திரன் அவர்களையும் ஒன்றாக சந்தித்து உரையாடியதும், அவர்கள் மாணவர்களுக்கு பயிற்சிப் பட்டறை வழங்கியதும் முன்னேற்பாடற்ற முக்கிய நிகழ்வாக அமைந்தது.

கலாக்ஷேத்ராவில் நடனம் பயின்று ஸ்வீடன் நாட்டில் நம் கலை கலாச்சாரத்தை கட்டிக்காக்கும் நடனக் கலைஞர், ஆசிரியர் உஷா பாலசுந்தரம் அவர்களோடான கலைச்சந்திப்பு பார்ம்பரிய பல்வகை நடனங்களை அறியும் பாங்கில் அமைந்தது. ஒவ்வொரு பயணமும் பல நூல்களை வாசித்த பயன் தரும். அதிலும் கலைஞர்கள் சந்திப்பு ஒரு நூலக அனுபவத்தினைத் தரும்.சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் ! என்ற பாரதி சொற்கள் என் செவியெல்லாம் எதிரொலிக்க, செல்லும் வழியெல்லாம் பெற்றுப் பகிர்ந்த பல உன்னத கலானுபவம் மீண்டும் மீண்டும் சிந்தைக்குள் உலவ, புதிதாய்ப் பிறந்து தரை தொட்டேன் இலங்காபுரியில்.

பயணம் இனிது ! தோழமை இனிது ! கலை இனிது !








அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்


செல்வராஜா
Selvaraja Gold House
எமது நிறுவனத்தின்
23 ஆவது ஆண்டு
நிறைவில் அனைவருக்கும்
எமது நன்றியையும்
மகிழ்ச்சியையும்
தெரிவித்துக் கொள்கிறோம்.
23th
YEARS
ANNIVERSARY
celebration
23 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு
20.10.2025 முதல் 30.10.2025 வரை
தங்க நகைகள் நம்பமுடியாத
விலைக்கழிவு விலையில்.
எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள
சீட்டுத்திட்டத்தில் இணைந்து
நீங்களும் ஓர் அதிஷ்ட சாலியாகுங்கள்.
அனைவருக்கும் எமது
தீபாவளி நல் வாழ்த்துகள்
162b Mitcham Road – London – SW17 9NJ Tel; 0208 767 3795 -078 25 005 269



# இலங்கை சினிமாவை உலகத் தரத்துக்கு எடுத்துச் செல்லக் கூடிய இளம் படைப்பாளி நவயுகா குகராஜா





ராஜலிங்கம் சுபாஷினி (இலங்கை)

இலங்கைச் சினிமாவில் புதிதாகக் கேட்டுக் கொண்டிருக்கும் குரல்களில் குறிப்பிடத்தக்கவர், நவயுகா குகராஜா. சமூகத்தைச் சிந்திக்கச் செய்வதற்கான ஒரு கருவியாக சினிமாவை அணுகும் இவர், சினிமாவில் சாதிக்கத் துடிக்கும் இளம் பெண் கலைஞர்களுக்கான சிறந்த முன்மாதிரி எனலாம். கலை என்பது பொழுதுபோக்குக்காக மட்டுமல்ல, சமூகப் பிரச்சினைகளை வெளிப்படுத்தி மாற்றத்திற்கான உரையாடலைத் தொடங்கவும் பயன்பட வேண்டும் என்பதில் உறுதியான நம்பிக்கையோடு செயற்படும் ஒரு பெண் ஆளுமை. கவிதாயினி, எழுத்தாளர், நடிகை, இயக்குனர் என பன்முக திறமைகளுடன் 15 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்துடன் விளங்கும் நவயுகாவின் திறமை இலங்கை சினிமாவுக்கு கிடைத்த பெரும் உந்து சக்தி என்றால் அது மிகையல்ல.

யாழ்ப்பணம், தெல்லிப்பளையில் பிறந்த நவயுகா, தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் இராமநாதன் கல்லூரியிலும், தொடர்ந்து வவுனியா இறம்பைக் குளம் மகளிர் மகாவித்தியாலத்திலும் கற்றுத் தேர்ந்தவர். இந்தியாவில், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் வணிகப் பட்டதாரியான இவர், தொழில்நுட்பத் துறையில் ஆசிரிய டிப்ளோமா முடித்துள்ளதோடு, தமிழ், சிங்கள மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் தேர்ச்சி பெற்றவர்.அத்துடன், நிவ்யோர்க் பல்கலைக்கழகம் – டிஷ் கலைப் பள்ளியில் திரைப்படம் மற்றும் தொலைக்காட்சித் துறை சார்ந்து கற்றிருப்பதுடன், 'நியூ சவுத் வேல்ஸ்' பல்கலைக்கழகத்திலும் தன் துறைக்குத் தேவையான கற்கை நெறியை பூர்த்தி செய்துள்ளார்.

பாடசாலைக் காலத்தில் இருந்தே நாடகம், இசை, நாட்டுக்கூத்து போன்ற கலைகளில் ஈடுபாடுடைய நவயுகா, எழுத்தாளராகவே ஆரம்பத்தில் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார். 10க்கும் மேற்பட்ட பாடல்களை எழுதியுள்ள இவர், இலங்கைப் பெண்கள் நடிப்புத்துறையில் தங்களை நிலை நிறுத்திக்கொள்ளத் தயங்கும் ஒரு சூழலில் நடிப்புத் துறையை பிரதானமாகக் கொண்டு செயற்படுகின்றார். குறுந்திரைப்படம் ஒன்றின் ஊடாக தன் பிரவேசத்தை ஆரம்பித்தவர், 'ஆறாம் நிலம்', 'ஒற்றை பனை மரம்' போன்ற பல திரைப்படங்களில் பிரதான கதாபாத்திரத்திலும், 'கோமாளிகிங்ஸ்' திரைப்படத்தில் குணச்சித்திர கதாபாத்திரத்திலும் நடித்துள்ளார்.



இதில், 'ஒற்றைப் பனை மரம்' பல விருதுகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. தவிர இலங்கை திரைப்படத் துறையில் மிகப்பெரிய பொருட் செலவில் தயாரான 'கிரிவெசிபுர' என்னும் சிங்கள திரைப்படத்திலும் குணச்சித்திர கதாபாத்திரத்தில் நடித்து அசத்தியுள்ளார். மும்மொழியும் பயன்படுத்தப்பட்ட இத்திரைப்படமானது, சிறந்த வரலாற்றுப்படமாகும். The Frozen Fire – (Director Anuruddha Jayasinghe) எனும் திரைப்படத்துக்கான தமிழ் உபதலைப்புக்களை செய்துள்ள நவயுகா, 'மாசறு', 'வினவு' ஆகிய இரு குறுந்திரைப்படங்களிலும் தன் நடிப்பாற்றலை வெளிப்படுத்தியிருந்தார். இப்படங்கள் பாலியல் சுரண்டல்களைப் பற்றிப் பேசும் படங்களாகும்.

எழுத்துத் துறையிலும் ஆற்றல் மிகுந்த நவயுகா, பல புத்தகங்களை எழுதி வெளியிட்டுள்ளார். 'மன்மதம் நீ' , 'வனயட்சி', 'சூப்பனகையும் ஒரு பவளத்தீவும்', 'உயிர் உடையும் ஓசைகள்' போன்ற பல தமிழ் கவிதை புத்தகங்கள் இவரின் கைவண்ணத்தில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றுள்ளன. 'கோமாளி கிங்ஸ்' மற்றும் 'கின்னேன் உபன் சீத்தல' ஆகிய படங்களுக்கான தமிழிலிருந்து சிங்களம் மற்றும் சிங்களத்திலிருந்து தமிழுக்கான உப தலைப்பு மொழிபெயர்ப்புகளைச் செய்துள்ளார். அதைவிட இலங்கை சினிமாவுக்காக 15க்கும் மேற்பட்ட தமிழ் பாடல்களை எழுதியுள்ள நவயுகா, 800 இலங்கை-இந்திய தமிழ் திரைப்படத்தில் இணை டப்பிங் இயக்குனராகவும் செயற்பட்டவர்.

## "பெட்டைக் கோழிக் கூவி"

2021 ஆம் ஆண்டு நவயுகாவின் இயக்கத்தில் வெளியான குறுந்திரைப் படமான "பெட்டைக் கோழிக் கூவி" (Pet taik Kozhi Koovi) இலங்கை மட்டுமின்றி சர்வதேச ரீதியிலும் பெரும் கவனத்தை ஈர்த்தது. சமூக வலைத்தளங்களில் பெண்கள் எதிர்கொள்ளும் அவதூறு, அவமதிப்பு மற்றும் அதனால் ஏற்படும் மன உளைச்சல்களை மையமாகக் கொண்ட இந்த ஆவணப் படம், பெண்களின் குரலை வலுப்படுத்தும் வகையில் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தப் படம் தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் உருவாக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மொழி வேறுபாட்டைக் கடந்து ஒரே பிரச்சினையை சமூகத்துக்கு முன்வைத்திருந்தமை, நவயுகாவின் விரிவான பார்வையை வெளிப்படுத்தியிருந்தது ■

17 ஆம் பக்கம் பார்க்க...






# இழப்புகள் தரும் வெற்றிடங்கள்

ஒவ்வொரு சவப்பெட்டியும் சுமப்பது வெறும் சடலங்களல்ல, அவை உரைக்கப்படாத கதைகளின் தூக்கம். இன்னும் முடியாத கனவுகளின் உறக்கம். இன்னும் பகிரப்படாத அறிவின் விடைபெறல்!

மரணம் தவிர்க்க முடியாதது. அவை விட்டுச் செல்லும் வெற்றிடங்களை யாரும் எளிதில் நிரப்பிவிடவும் முடியாது. மரணம் அழைப்பிதழ் அனுப்பிவிட்டு சந்திப்பதில்லை. அது தனது நேரத்துக்காய்க் காத்திருக்கிறது. எல்லோருக்கும் பின்னால் மரணம் ஒரு உணரப்படாத நிழல் போல கண நேரமும் பின் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. எப்போது அந்த நிழல் நிஜத்தை விழுக்கி ஏப்பம் விடும் என்பதை யாரும் கணிக்க முடியாது. மரணத்தின் கண்ணியிலிருந்து எந்த. மனிதரும் தப்பிவிடவும் முடியாது. அதுவே இறைவனின் ஏற்பாடு, அதுவே இயற்கையில் இலக்கணம்.

ஒவ்வொரு மனிதனும் அன்பு, அறிவு, திறமை போன்றவற்றை தனக்குள் நிரப்பி வைத்திருக்கும் ஒரு உலகம். ஒரு மனிதர் இறக்கும்போது அவருடன் சேர்ந்து அந்த உலகமே இறந்து விடுகிறது.

செய்தித் தாள்களில் மரணச் செய்திகளைப் பார்க்கும் போது அவை ஒரு செய்தியாக நம்மைக் கடந்து சென்று விடுகிறது. அல்லது பெரும் துயர் நிகழ்வுகளில் மரணம் ஒரு புள்ளி விவரமாய் நம்மைச் சந்தித்து விட்டு விடைபெறுகிறது. நில நடுக்கத்தால் ஆயிரம் பேர் இறந்தார்கள் எனும் போது அது ஒரு செய்தியாக மட்டுமே நம்மைத் தாக்குகிறது. சில நாட்களில் இன்னொரு செய்தி வந்து அதன் மீது அமர்ந்து அதை மறக்கச் செய்து விடுகிறது.

ஆனால் ஒவ்வொரு எண்ணிக்கையும் ஒரு முகம், ஒரு குடும்பம், ஒரு முடியாத துயரம். வீடு திரும்பாத ஒரு தந்தையின் கதை. கனவுகள் சிதைந்து போன ஒரு மகளின் கதை. ஒரு நண்பனின் உறைந்து போன சிரிப்பு. எந்த ஒரு செய்தியும் நம்மை கலங்கடிக்க வேண்டும். அந்த குடும்பத்தின் வலியோடு நம்மை இணைக்க வேண்டும். அவர்களுக்கு உதவ வேண்டும் எனும் உத்வேகத்தை நமக்கு நல்க வேண்டும். அவர்களோடு அமர்ந்து ஆறுதல் சொல்ல வேண்டும் எனும் தாகத்தை நமக்குள் நிரப்ப வேண்டும். ஏனெனில் அவர்கள் வெறும் தரவுகளல்ல, நம் உறவுகள்.

குடும்பங்களில் ஒரு மரணம் நிகழ்ந்தால், அதன் பின் அந்தக் குடும்பம் பழைய நிலைக்கு என்றைக்குமே திரும்புவதில்லை. அவர்களுடைய வாழ்க்கை தொடரும், ஆனால் அது இன்னொரு வடிவத்திலேயே இருக்கும். பல குடும்பங்களில் அது வெறும் துயரம் மட்டுமல்ல, வாழ்க்கையை அடுத்த நாளுக்குத் தள்ளிச் செல்வது எப்படி எனும் திகைப்பு. வருமானத்துக்கு என்ன செய்வது எனும் அதிர்ச்சி.

கூட்டுக் குடும்பக் காலத்தில் மரணத்தின் தாக்கத்தை எதிர்கொள்வதும், மேற்கொள்வதும் சற்று எளிதாய் இருந்தது. ஏனெனில் ஒரு இழை அறுபடும் போது தாங்கிப் பிடிக்க பல இழைகள் இருந்தன. ஆனால் இப்போது தனித்தனிக் குடும்பங்களில் கிளைகள் வெட்டப்பட்டால் அங்கே தாங்கிப் பிடிக்க வேறு கிளைகள் இருப்பதில்லை.

எப்போதையும் விட அதிகமாய் நம் அன்பும், அரவணைப்பும் ஒருவருக்குத் தேவைப்படுவது மரண காலங்களில் தான். வெறும் ஒரு நாள் சந்திப்புடனோ, ஒருவார தொடர்புடனோ நம் உறவின் கரிசனை முடிந்து விடக் கூடாது. அவை அவர்கள் மீண்டு வரும் வரை தொடரவேண்டும். அதுவே மனிதத்தின் தன்மை. அதுவே மனுக்குலத்தின் மேன்மை. அதனால் தான் கிராமங்களில் ஒரு பழமொழி சொல்வார்கள், 'கல்யாண வீட்டுக்கு போகாட்டாலும், இழவு வீட்டுக்குப் போ' என்று ! நாம் கொண்டாட்டங்களில் சிரிப்பதல்ல, தவிப்புகளில் கலந்து கொண்டு அழுவதே மனிதத்தின் மகத்துவம்.

இழப்புகள் வெறும் தனிநபர் இழப்புகளாகவோ, குடும்ப இழப்புகளாகவோ மட்டும் நின்று விடுவதும் இல்லை. ஒவ்வொரு மரணமும் ஒரு திறமையின் புதையலை புதைகுழிக்கு அனுப்பும் கணம். ஒரு சமூகம் வளர்ச்சியடையத் தேவைப்படும் பல ஆற்றல்கள் அடக்கமாகும் கணம். ஒரு ஆசிரியர் இறக்கும்போது கற்றுத் தராத பாடங்கள் அவருக்குப் பின்னால் கரைந்து விடுகின்றன. ஒரு மருத்துவர் இறக்கும் போது அவரை நம்பியிருக்கும் பல நோயாளிகள் தவிக்கின்றனர். ஒரு கலைஞர் இறக்கும் போது கலையின் கிரீடங்களில் அவர் வைக்க வேண்டிய பல முத்துகள் மறைந்து விடுகின்றன. ஒவ்வொரு மனிதரும் தன்னுடைய ஆற்றலை, திறமைகளை தன்னுடைய மறைவுக்குப் பின் மக்களுக்குப் பயன்படும் வண்ணம் பகிர வேண்டும். அவை ஏதோ ஒரு வகையில் அடுத்தடுத்த தலைமுறையினருக்குப் பயன்படும் வகையில் மாற்றப்பட வேண்டும். நாளைய தலைமுறைக்காய் இன்று விதை நடுதல் போல அது நடைபெற வேண்டும். இழப்புகளை முழுமையாய் நிவர்த்தி செய்ய முடியாது, ஆனால் இத்தகைய முயற்சிகளினால் அதன் தாக்கத்தைச்



17 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# இழப்புகள் தரும் வெற்றிடங்கள்

சற்றே தணிக்க முடியும். ஒவ்வொரு தனி மனிதரும் தனது வாழ்க்கை தனக்கானது மட்டுமல்ல, தன் குடும்பத்துக்கானது, தன் நண்பர்களுக்கானது, அலுவலகத்துக்கானது, சமூகத்துக்கானது எனும் சிந்தனையுடன் வாழவேண்டும். உடலை நலமுடன் பேணுவதும், உடலின் நலனுக்கு குறைவு வரும்போது அதை சரி செய்வதும். உடற்பயிற்சிகள் செய்வதும் என சரியான முறையில் நேரத்தைச் செலவிட வேண்டும்.

விபத்துகளும் கணிசமான உயிர்களைக் குடித்து ஏப்பம் விடுகிறது. நாம் கேள்விப் படும் விபத்துகள் எப்போதுமே விபத்துகளாய் இருப்பதில்லை. அவை அலட்சியங்களின் விடையாகவும் அமர்ந்து விடுகின்றன. குடித்துவிட்டுத் வாகனம் ஓட்டுபவர் செய்யும் விபத்து, விபத்தல்ல ! அது அலட்சியத்தின் பிள்ளை. பாதுகாப்பை உதறிவிட்டு பைக் ஓட்டும்போது நிகழும் உயிரிழப்பு விபத்தல்ல, அஜாக்கிரதையின் பயன். இத்தகைய பொறுப்பற்ற செயல்கள் பல பொறுப்பான, நிதானமான, நல்ல மனிதர்களையும் சாகடித்து விடுகிறது.

பாதுகாப்பையும், சமூக பொறுப்புணர்வையும் நாம் ஒரு வாகனம் ஓட்டும்போது கூட கைக்கொள்ள வேண்டும். நான் வாகனம் ஓட்டுவது என்னை மட்டுமே சார்ந்ததல்ல, என் குடும்பம் மற்றும் என் சமூகம் சார்ந்தது எனும் சிந்தனை வேண்டும்.

பல தற்கொலைகள் பொருளாதார பலவீனத்தால் நிகழ்கின்றன. பொருளாதாரத்தை நிர்வகிக்கத் தெரியாததால் கூட பல மரணங்கள் நிகழ்கின்றன. பல தற்கொலைகள் உப்பு சப்பில்லாத காரணத்துக்காய் நிகழ்கின்றன. ஒரு தற்கொலை நிகழும்போது அதற்கான பொறுப்பை அவர் சார்ந்த சமூகமே ஏற்கவேண்டும். அவருக்கு உதவாத, அவரை நல்வழிப்



படுத்தாத, அவருக்கு ஊக்கம் ஊட்டாத ஒவ்வொருவருமே குற்றவாளிகள் தான். தற்கொலை செய்ய வேண்டும் என முடிவெடுப்பவரின் மன உளைச்சல் சொல்ல முடியாத துயரத்தின் படுகுழி. பேரன்பின் கனிவுடனும், கருணையுடனும் அவர்கள் குடும்பத்தை நாம் அணுக வேண்டும்.

மரணம் என்பது எப்போது வேண்டுமானாலும் நிகழலாம் எனும் சிந்தனையுடன் ஒவ்வொரு கணத்தையும் அணுக வேண்டும். கனவுகளைத் தள்ளி வைக்காமல், பொறுப்புகளைக் கிடப்பில் போடாமல், மனிதத்தை ஒத்தி வைக்காமல், இலட்சியத்தை மறந்து விடாமல் பயணித்துக் கொண்டே இருக்க வேண்டும். மணத்தைத் தனக்குள் ஒளித்து வைப்பதில்லை மலர் ! தோட்டத்துக்கே வாசனை வழங்குகிறது. தன் கனியைத் தானே தின்று திளைப்பதில்லை மரம், பிறருக்குப் பந்தி வைத்து மகிழ்கிறது. நம் வாழ்க்கை அப்படித்தான் இருக்க வேண்டும்.

ஒரு மனிதர் இறக்கும்போது அவருடன் சேர்ந்து ஒரு அறிவின் நூலகம் மறைகிறது, ஒரு அனுபவ ஆலை மூடப்படுகிறது. ஒரு ஞானத்தின் வனம் சாம்பலாய் மாறிவிடுகிறது. 'அவரு இருந்தப்போ ஒண்ணும் தெரியல. இப்போ என்ன பண்றதுன்னே தெரியல' என கூறும் எத்தனையோ மனிதர்களை நாம் சந்தித்திருப்போம் ! அவையெல்லாம் நிரப்பப்படாத வெற்றிடங்களின் கதறல்களே.

மரணம் என்பது வெறும் இதயத் துடிப்பின் முடிவுரையல்ல. சமூகத்திற்கு அவர்கள் இசைத்துக் கொண்டிருந்த ஒரு பாடலின் முடிவுரை. அதனால் தான் அவர்கள் விலகும் போது மௌனத்தின் பேரொலி நம்மை உலுக்குகிறது. ஒரு மரணம் ஒரு மாபெரும் கண்டுபிடிப்பைப் புதைக்கலாம், ஒரு மரணம் ஒரு மாபெரும் இலக்கியத்தை இறக்கவிடலாம், ஒரு மரணம் ஒரு மாபெரும் சமூக மாற்றத்தை அழித்துவிடலாம்.

ஆபிரகாம் லிங்கன் படுகொலை செய்யப்பட்டதால் அமெரிக்கா முழுவதும் இனப் பதட்டம் சில நூற்றாண்டுகள் தொடர்ந்தது. அவர் மரணிக்காமல் இருந் திருந்தால் ஒரு வேளை இனவெறியின் தாண்டவம் முன்னமே தணிந்திருக்கும்.





மகாத்மா காந்தியடிகள் படுகொலை செய்யப்படாமல் இருந்திருந்தால், இந்தியாவின் கட்டமைப்பு இன்னும் வலுவாக இருந்திருக்கும். ராஜிவ் காந்தி படுகொலை செய்யப்படாமல் இருந்திருந்தால் டிஜிடல் தொழில்நுட்ப வளர்ச்சி பல பத்தாண்டுகளுக்கு முன்பே நிகழ்ந்திருக்கும். இப்படி பல தலைவர்களின் மறைவு தேசங்களில் பல தலைமுறைகளைப் பின்னுக்கு இழுக்கின்றன.

ஒரு மனிதர் எப்படி இருந்தார் ! என்பதை மட்டும் மரணம் பேசுவதில்லை. அவர் எப்படியெல்லாம் இருந்திருப்பார் என்பதையும் சேர்த்தே பேசுகிறது. அவர் இருந்திருந்தால் எப்படியெல்லாம் இருந்திருக்கும் எனும் ஏக்கத்தையும் சேர்த்தே பேசுகிறது. ஏனெனில் பேரொளி மனிதர்கள் மறையும் போது சமூகம் இருட்டின் பாதையில் நீண்ட காலம் நடக்க வேண்டியிருக்கிறது. அவர்களின் மறைவு நல்ல வரலாற்றின் சில பக்கங்களைக் கிழித்து எறிகிறது.

மரணம் தரும் வலிகள் கொடுமையானவை, அந்த வலிகளுடன் இருப்பவர்களை அன்புடன் அரவணைப்போம்.

மரணம் தரும் இழப்புகள் கடுமையானவை, அந்த இழப்புகளிலிருந்து மீள்வதற்கு கனிவுடன் கை கொடுப்போம்.

மரணம் தரும் வெற்றிடம் கொடுமையானது, அதை மனிதத்தால் இட்டு நிரப்ப முன்வருவோம்.

ஏனெனில் மரணம் எல்லோரையும் சந்திக்கும். மரணத்தில் உடனிருக்கும் மனிதர்களையே உறவுகள் சிந்திக்கும். ■

# இலங்கை சினிமாவை உலகத் தரத்துக்கு எடுத்துச் செல்லக் கூடிய இளம் படைப்பாளி நவயுகா குகராஜா



15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

என்று தான் கூறவேண்டும். குறும்படத்தின் குறுகிய நேரத்தில், அவர் சுருக்கமான காட்சிகளின் வழியாக வலுவான செய்தியை அளித்திருந்தமை சிறப்புக்குரியது.

## புதிய அடையாளமாக மாறிய நவயுகா

இவரின் படைப்புக்களை பார்க்கையில், அவரின் பார்வையில் சினிமா என்பது சிரிப்பையும் மகிழ்ச்சியையும் அளிப்பதற்கே அல்ல சிந்திக்கவும் கேள்விகளை எழுப்பவும் செய்ய வேண்டும் என்பதையே அவர் நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றார் என்று தான் எண்ணத் தோன்றுகின்றது. அதனால் தான் அவரது ஒவ்வொரு படைப்பும் பொழுதுபோக்குடன் கூடிய விழிப்புணர்வு உரையாடலாக அமைகின்றன.

## இவர் பெற்ற விருதுகள்

தேசிய ரீதியிலும், சர்வதேச அளவிலும் நடிப்பு, இயக்கம், தயாரிப்பு போன்றவற்றுக்கு, கிட்டதட்ட 35க்கும் மேற்பட்ட விருதுகளை வென்று குவித்துள்ளார் நவயுகா. இவர் பெற்ற விருதுகள் மற்றும் அங்கீகாரங்கள் குறித்த பட்டியலை பார்க்கையில், ஒரு சொற்ப காலத்தில் இத்தனை சாதனைகள் சாத்தியமா என்றே எண்ணத் தோன்றுகின்றது.

## சர்வதேச அளவில் பேசப்படும் 'பொம்மை'

இலங்கை சினிமாவைப் பொறுத்தவரை, சர்வதேசத்தை தாண்டி தேசிய அளவில் சற்று பிரபலமடைந்தாலே சற்று ஆறுதல் தான். இந்திய, அமெரிக்க சினிமாவில் மட்டுமே மூழ்கியிருக்கும் நம்மில் பலர், நம் நாட்டு படைப்புக்களை ஏனோ தொட்டுக்கூட பார்ப்பது கிடையாது. நமது கதைகளை சொல்ல வேண்டுமென்ற முயற்சியில் நமக்கான சினிமா மெதுவாக



முளைத்து வளரத் தொடங்கியிருக்கிறது. இதற்கு, நவயுகா உள்ளிட்ட இலங்கை கலைஞர்களின் கைவண்ணத்தில் உருவாகி, சர்வதேச ரீதியில் பேசப்பட்டு வரும் 'பொம்மை' சிறந்ததோர் எடுத்துக்காட்டு. IBC தமிழ் தயாரிப்பு நிறுவனம் தயாரித்துள்ள 'பொம்மை' நவயுகா மற்றும், யசோதா, திருமலை பிரணவன், சுகிர்தன் கிறிஸ்துராஜா, ரெக்சன் விக்கி, மல்லிகா கீர்த்தி, ஜங்கரன் ஜெனொஷியா போன்ற நம் நாட்டின் திறமை மிகு கலைஞர்களின் கூட்டு முயற்சியில் உருவாகி உள்ளமை பெருமைக்குரியது. இத்திரைப்படமானது சுவீடன் நாட்டின் 'லுலீயா' சர்வதேச திரைப்பட விழாவிலும் 'போடன்' சர்வதேச திரைப்பட விழாவிலும் தமிழக சர்வதேச திரைப்பட விழாவிலும் விருதுகளை வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு சினி ரோயல் சர்வதேச திரைப்பட விழாவிற்கும் தெரிவாகியுள்ளது.

நவயுகா இயக்கத்தில், மதுனி ஹிரன்யா அழகக்கோனின், வற்சு ஆகியோரது ஒளிப்பதிவில், ஆ.ரஜனிகாந்த் இசையமைத்துள்ளார். மாருதி.மு படத்தொகுப்பையும், ஜோசுவா ஹெபி தயாரிப்பு வடிவமைப்பையும், சிக பூபதிராஜா ஒலி வடிவமைப்பும் செய்துள்ளனர். இப்படத்தின் முதன்மை நிர்வாகத் தயாரிப்பாளராக விக்கி களமிறங்கியுள்ளார்.

இத்தனை திறமை மிகு இளம் படைப்பாளர்களின் கைவண்ணத்தில் உருவாகியுள்ள 'பொம்மை' செப்டெம்பர் 19 இலங்கைத் திரையரங்குகளில். இத்தனை திறமைகளுடன் வலம் வரும் நவயுகா குகராஜா வெற்றிமணியின் மாண்புறு மங்கையாக மிளிர்கிறார். ■



அழகர் கோயில் அலங்கார வளைவு கடந்து முன்னர் முழுமையான கோயில் தோற்றம்

பழமுதிர்சோலை...

# வாராரு வாராரு... அழகர் வாராரு...!

தமிழகத்தில் நூற்றியெட்டு வைஷ் ணவத் திருத்தலங்களில் ஒன்றான ".. அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில்.." மதுரை மாநகரில் அமைந்துள்ளது.

சுந்தரராஜ பெருமாள் எனும் திருநாமத் துடன் கையில் சங்கு, சக்கரம், வில், வாள், கதை என பஞ்சாயுதங்களுடன் வலப்புற த்தில் திருமகள், இடப் புறத்தில் மண்மகள் கிழக்கு நோக்கியும், மூலவர் பரமஸ்வாமி நின்ற கோ லத்திலிலும் காட்சி தருகிறார்.

எம்பெருமானின் கையில் உள்ள சக் கரம் பக்தர்களிடமிருந்து அபயக்குரல் வந்தால், கணநேரமும் தாமதிக்காமல் துஷ்டர்களை அழிக்க வேண்டும் என்ப தற்காக சக்கரத்தைப் பிரயோக நிலையி லேயே வைத்திருக்கிறார்.

தனிசன்னதியில் கல்யாண சுந்தரவல்லி தாயார் எழுந்தருளி பெயருக்கு ஏ ற்றவாறு ஏகசௌந்தர்யமாக விளங்கி அருள்பாலி க்கிறார்.

சுந்தரராஜ பெருமாளுக்கு பதினெட்டாம் படிக் கருகருப்பண்ணசாமியே தோள் கொடுக்கும் தோழன் அல்லது முதன்மை மெய்காப்பாளர் என அனைத் துமாக விள ங்கி காவல் காத்துக் கொண்டிருக்கிற ஐதீ கமாகும்..!

ஆகவே தான் அழகர் கோயிலுக்குள் நுழைந்தவுடன் பக்தர்கள் ".. பதினெட் டாம்படிக் கருப்பண்ணசாமியை.." முதலில் கும்பிட்டு பிரசாதமாக வழங்கும் விபு தியை நெற்றி நிறைய பூசிக்கொண்டு அழகரை தரிசிக்கச் செல்கிறார்கள் இது காலம் காலமாக தொடர்கிறது. அழகர் கோயில் மதில் சுவர்கள் மட்டுமே ஒருமைல் சுற்றளவு கொண்டிருக்கிறது, பலசிறிய மலைகள் நாலாப்பக்கமும் பிரிந்து ஒட்டு மொத்தமாக கழுகு பார்வையில் பார்க்கும் போது "..காளை வடிவம்.." போல காட்சி தருகிறது.



அழகர் கோயில் நுழைவு வாசலின் அலங்கார வளைவு



அழகர் கோயில் உள்ளே



கட்டுரை, படங்கள்: மதுரை ஆர்.கணேசன்

அழகர் மலை என்றாலும் கீழே தான் கோயில் அமைந்துள்ளது மலையில் உள்ள ராக்காயி அம்மனை தரிசித்து விட்டு நூபுரகங்கை தீர்த்ததிற்கு சென்று பக்தர்கள் நீராடுவது வழக்கமாக உள்ளது மலைக்கு செல்லதேவஸ்தான பேருந்து வசதி உள்ளது. முருகனின் அறுபடைவீ டுகளில் ஒன்றான பழமுதிர்சோலையில் "..அருள்மிகு சோலைமலை முருகன் திருக்கோயில்.." ராக்காயி அம்மன் கோயி லுக்கு செல்லும் வழியில் அமைந்திருக்கி ன்றது முருகன் வள்ளி தெய்வானையுடன் இணைந்து அருள்பாலிக்கிறார்கள்.

அழகர் கோயிலின் இரண்டு முக்கி யத் திருவிழாக்களில் ஒன்று ஆடிமாதம் "..ஆடித்தேர்த் திருவிழா.." நடைபெறும் இன்னொன்று உலக பிரசித்தி பெற் ற சித்திரைத் திருவிழா.." அழகர் கோயில் மற்றும் மீனாட்சி கோயில் சார்பாகவும் மொத்தம் 22 நாட்கள் நடைபெறுகிறது.

அழகர் கோயில் மலையிலிருந்து தங்கப்பல்லக்கில் புறப்படும் கள்ளழகர் விடியற் காலையில் லட்சக்கணக்கில் வெள்ளமெனக் கூடியுள்ள பக்தர்க ளின் நடுவிலிருந்து "..கள்ளழகர் வைகையா ற்றில் இறங்கி.." அருள்பாலி க்கிறார்.

ஒவ்வொரு மண்டகப்படியாக செல்லும் கள்ளழகர் மண்டூக முனிவருக்கு சாபவி மோசனம், தசாவதாரம் போன்ற அனை த்து புராண நிகழ்வினை நடத்தியும், ஏற்றுக்கொள்ளும் கள்ளழகர் வழிநெடுகி லும் பக்தர்களின் வரவேற்பைப் பெற்றுக் கொண்டு திரும்பவும் அழகர் மலைக்கு திரும்புகிறார்.

அழகர் கோயிலின் "..பலவகை தானி யங்களுடன் கருப்பு உளுந்தில் நெய்யுடன் சேர்த்து செய்து பெருமாளுக்கு படை க்கப்படும் சம்பாதோசை.." இக் கோயில் பிரசாத ஸ்டால்களில் கிடைக்கும் மறக்கா மல் வாங்கி சாப்பிடுங்க அப்பத்தான் பெருமாளை தரிசித்த பலன் முழுமையாக கிடைத்த மாதிரி இருக்கும்..!

மதுரையில் சித்திரைத் திருவிழா நாட்க ளில் "..வாராரு வாராரு அழகர் வாராரு சப்ரம் ஏறி வாராரு நம்ம சங்கடம் தீர் க்கப் போறாரு.." மற்றும் "..பல் லாக்கு குதிரையில பவனி வரும் மீனாட்சி.." எனும் பாடல்கள் திரும்ப திரும்ப ஒலித் துக் கொண்டே இருக்கும் கேட்கும் போது பக்தர்களிடம் இறை பக்தி உடலெங்கும் புத்துணர்வாக தூண்டி விடும் என்பதில் ஐய மில்லை..! இக்கோயில் எங்குள்ளது..?

மதுரை நகரிலிருந்து வடக்கே 22 கி.மீ தூரத்தில் இக்கோயில் அமைந்தி ருக்கிறது பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து 44 ஆம் நம்பர் வழித்தடம் கொண்ட பேருந்து அடிக்கடி இயக்கப்படுகிறது.

தமிழக அரசு இந்து அறநிலையத்துறை நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இக் கோயில் காலை 6.00 மணி முதல் 12.30 மணி வரை மீண்டும் மாலை 3.30 மணி முதல் 8.00 மணி வரை நடை திறந்திருக்கும்.



கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்குதல்



கள்ளழகர் மண்டகப்படி எழுந்தருளுதல்



# ஏன் மலைப் பிரதேசத்தில் குளிர் அதிகமாக இருக்கிறது?



Dr.நிரோஷன் தில்லைநாதன்
(யேர்மனி)

நெருப்பை எடுத்துக்கொள்வோம். அந்த நெருப்பில் அருகே நமது விரலைக் கொண்டு சென்றால் என்ன நடக்கும்? எங்களால் அதன் வெப்பத்தை உணர முடிகின்றது. இதுவே அந்த நெருப்பில் இருந்து நமது விரலைக் கொஞ்சம் கொஞ்சமாக விலத்தும் போது, வெப்பம் குறைந்துகொண்டு போகின்றது என்பதை உணர்வோம். சரி, இது மிகவும் இலகுவான இயற்பியல் ரீதியான சிந்தனை ஆகும். ஆனால் ஒரு விஷயத்தைக் கவனித்து இருக்கின்றீர்களா? சூரியனும் ஒரு விதமான பெரும் நெருப்பு தானே? நாங்கள் மலைப்பிரதேசத்தில், அதாவது சூரியனுக்குக் கொஞ்சம் அண்மையில் இருக்கும்



போது, நமக்குக் குளிராக இருக்கும், ஆனால் மலைப்பிரதேசத்தை விட்டுக் கீழ் நோக்கிச் செல்லும்போது, அதாவது சூரியனை விட்டு விலகும் போது, வெப்பம் அதிகரிக்கின்றதே? அது எப்படி?

ஆரம்பத்தில் நான் நெருப்பை வைத்துச் சொன்ன உதாரணம் போல், நாம் மலைப் பிரதேசத்தில் மேல் நோக்கிப் போகும் போது வெப்பம் அதிகமாகவும், கீழ் நோக்கிச் செல்லும் போது வெப்பம் குறைவாகவும் தானே இருக்க வேண்டும்? ஆனால் ஏன் அப்படி இருப்பதில்லை? இதற்குக் காரணத்தை நான் அறியத்தர முன்பு, முதலில் வெப்பநிலை என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். நம்மைச் சுற்றி இருக்கும் காற்று எண்ணற்ற துகள்களைக் கொண்டது. இலகுவாகச் சொல்லப்போனால் இந்தத் துகள்கள் அசைந்து ஒன்றுடன் ஒன்று உரசி மோதுவதால் தான் வெப்பம் ஏற்படுகின்றது. எனவே இந்தத் துகள்கள் ஒன்றுடன் ஒன்று உரசுவதன் வேகம், அதிகரிக்கும் போது வெப்பநிலையும் அதிகரிக்கின்றது. இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், காற்றின் அழுத்தத்தைப் பொறுத்து இந்தத் துகள்களின் வேகம் அதிகரிக்கின்றது. அழுத்தம் அதிகரித்தால் துகள்களின் வேகமும் அதிகரித்து, அத்துடன் வெப்பநிலையும் அதிகரிக்கின்றது. காற்றின் அழுத்தம் குறையும் போது, துகள்களின் வேகம் குறைந்து வெப்பநிலையும் குறைகின்றது.

சரி, இது இப்பொழுது உங்களுக்கு நன்றாகவே புரிந்து இருக்கும், எனவே மலைப் பிரதேசத்தில் ஏன் வெப்பநிலை குறைவாக இருக்கின்றது என்பதும் நன்றாகவே புரியும் அல்லவா? அதற்குக் காரணம் நாம் மலை ஒன்றில் ஏறி மேலே செல்லச் செல்ல காற்றின் அழுத்தமும் குறைந்து கொண்டே போகின்றது. காற்றின் அழுத்தம் குறைந்தால், துகள்களின் வேகமும் குறைந்து விடும்.

எனவே துகள்களின் வேகம் குறைந்தால், வெப்பநிலையும் தானாகக் குறைந்துகொண்டே போகும். ஆனால், இதுவே மலையில் இருந்து கீழ்நோக்கிச் செல்லும் போது மறுபடியும் காற்றின் அழுத்தம் அதிகரித்து, துகள்களின் வேகமும் அதிகரித்து அத்துடன் வெப்பநிலையும் அதிகரிக்கின்றது.

எனவே மலை பிரதேசத்தில் வெப்பநிலை குறைவாக இருப்பதற்குச் சூரியன் காரணம் இல்லை. அங்கே காற்றின் அழுத்தம் குறைவாக இருப்பது தான் காரணமாக இருக்கின்றது.

---







# யேர்மனியில் சிறப்புற அரங்கேறிய லரிஷா சசிகுமாரின் பரதநாட்டிய அரங்கேற்றம்

கடந்த 06.09.2025 யேர்மனியில் Rheine நகரத்தில் நிருத்திய நாட்டியாலய மாணவி செல்வி லரிஷா சசிகுமார் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் அரங்கம் நிறைந்த மக்களுடன் வெகுசிறப்பாக நடைபெற்றது. அணி செய்கலைஞர்களாக நட்டுவாங்கம்: திருமதி அமலா அன்ரனி சுரேஸ்குமார், மிருதங்கம்: திரு. பிரசாந் பிரணவநாதன், பாட்டு : பவானி, திரு.கிஷோர்குமார், வயலின்: நெய்வேலி.எஸ்.இராதாகிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று சிறப் பித்தனர்.

இவ்வரங்கேற்றத்தில் சிறப்பாக இளம் ஆசிரியர்களான திருமதி யாதவி அன்ரனி சுரேஸ்குமார் அவர்களும், செல்வி பகீரதி






கணேசலிங்கம் அவர்களும் குருவின் வழிநடத்தலில் முதல் முதலாக நட்டுவாங்கம் செய்து பெரும் பாராட்டைப் பெற்ற னர். அரங்கேற்றத்திற்கு சிறப்பு விருந்தினராக செல்வி சிவாங்கி கிருஷ்ணகுமார், (தென்னிந்திய திரைப்பட பாடகி நடிகை) திருமதி. வின்னி கிருஷ்ணகுமார், திருமதி ராஜஸ்ரீ ராமச்சந் திரன், திருமதி சாவித்திரி சரவணன், ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். மாணவி லரிஷா புன்னகை மாறாத இன்முகத்துடன், தாளக்கட்டுப்பாட்டுடனும், சிறப்பான நடனத்தை வழங் கினார். நிகழ்வு மங்களத்துடன் நிறைவு பெற்றது.

அரங்கேற்றம் சிறக்க அறிவிப்பாளர்களாக கடமை புரிந்த ராமேஷ், ஜெயக்குமார், செல்வி நிருபமா நகுலேந்திரன் ஆகியோரும் பாராட்டுக்குரியவர்களாவர்.





ரஞ்ஜனி சுப்ரமணியம் அவர்களின்

# சிறுகதைத்தொகுப்பு 'நெய்தல்நடை'



எழுத்தாளர்:
றஞ்ஜனி சுப்ரமணியம்

சிறுகதை என்பது ஒரு கனமான கலை வடிவம். இதைக் கையாள்வது அவ்வளவு எளிதல்ல. அப்படிப்பட்டக் கலை வடிவத்தைக் கைவரப் பெற்றவர் றஞ்ஜனி சுப்பிரமணியம் அவர்கள் என்று கூறலாம்.

இந்தச் சிறுகதைத் தொகுப்பில் பல்வேறுபட்ட வித்தியாசமான கருப் பொருட்களுடன் கதைகள் இடம்பெற்றிருப்பது வாசகர் மனதில் ஒரு பல்சுவைக் கதம்பமாக இதன் நினைவுகளை மிளிர வைக்கிறது. இதில் இடம்பெற்றுள்ள சில கதைகளில் வரும் பாத்திரங்களுக்கு கதைசொல்லி நேரடியாக விளக்கம் கொடாது அவர்களின் செயல்களினால் பாத்திரங்களின் தன்மைகளை அழகாகப் படைத்திருப்பது சிறப்பு. இவரின் கதைகளை வாசிக்கும்போது நாமும் உணர்வுத்தொற்றுக்கு உள்ளாகிவிடுகிறோம். பல கதைகள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. சில கதைகள் உரையாடல் வடிவில் அமைந்திருப்பதால் வாசிப்பதற்கு மிகவும் சுவாரசியமாக உள்ளது.

இந்தத் தொகுப்பில் இடம்பெறும் நெய்தல்நடை என்ற கதை, (தாய் வீடு பத்திரிகையில் 01.07.2025 வெளியானது) மிகவும் அழகாகப் புனையப்பட்ட இன்னொரு தளத்தில் வைத்துப் பார்க்க வேண்டிய கதை. மிகவும் மென்மையான உணர்வுகளால் நெய்யப்பட்ட கதை. இந்தக்கதை குறைந்த பாத்திரங்களுடன் ஒரு செய்தியை விளக்குவதாக அமைந்திருப்பினும் அதிலிருந்து நாம் பலவற்றைக் கற்கக்கூடியதாக உள்ளது.

இராணுவப் பயிற்சி முகாமில் விமான இலத்திரனியலும் தொலைத் தொடர்பு குறித்துப் பயிற்சிகளை வழங்குபவர்தான் கதாநாயகன். அவன் திருமணமானவன் எனத் தெரிந்திருந்தும் அவனிடம் மயக்கம் கொள்கின்ற இளம்பெண். இறுதியில் என்னவாகிறது என்பதுதான் கதை. கதை உரையாடல் வடிவில் பல முடிச்சுகளுடன் விறுவிறுப்பாக நகர்கிறது. ஏதோ எதிர்பார்க்கும் வாசகர்களுக்கு கதையின் இறுதிப் பகுதி ஓரளவு ஏமாற்றமாகக் கூட இருக்கலாம். ஆனால் வித்தியாசமான கதையை வாசித்த அநுபவம் மனதை நிறைக்கிறது. இந்தக் கதையின் கதாநாயகன் கதையின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை அஞ்சுவுடன் நட்பு ரீதியாக உரையாடுவது: அவள் அன்பு எனும் இழையினால்ப் பின்னப்பட்ட ஒரு கடிவாளத்தைக் கொண்டு அவனை வழிநடத்துவது போல் அமைந்துள்ளது. இந்த வகையில் அஞ்சு என்ற பாத்திரத்தை சிறப்பாகப் படைத்த றஞ்ஜனிக்கு ஒரு பாராட்டுத் தெரிவிக்கத்துதான் வேண்டும். இதில் வரும் அஞ்சு என்ற பாத்திரம் நல்லதொரு ஆண்-பெண் நட்பிற்கு உதாரணமாக அமைந்துள்ளது.

ஆண்-பெண் நட்பைப் பற்றி எமது சமூகத்தில் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. பல சமயங்களில், ஆண்-பெண் நட்பு என்பது காதலுக்கான ஒரு துவக்கமாக மட்டுமே பார்க்கப்படுகிறது. ஆனால், இது ஒரு தவறான கண்ணோட்டம். ஆண்-பெண் நட்பை ஒரு ஆழமான மற்றும் முதிர்ந்த உறவாகப் பார்ப்பதன் மூலம், ஒருவருக்கொருவர் ஆதரவாக வாழ்ந்து, சமூகத்தில் இணக்கமான சூழலை உருவாக்க முடியும். எதிர்பாலினத்தைப் பற்றிய தவறான புரிதல்களைக் களைந்து, அவர்களுக்குள் இருக்கும் இயல்பான வேறுபாடுகளைப் புரிந்து கொள்ள ஆண்- பெண் நட்பு உதவுகிறது.

பெண்களின் உயர்ச்சியில் தடைக்கல்லாகும் அந்நிய ஸ்வரம் ஆண்கள்தான் என



எனது வாசிப்பு அநுபவம்:
பவானி சற்குணசெல்வம்
(நெதர்லாந்து)

மனதில் நினைத்தவாறு, அரைகுறை சங்கீத அறிவு பெற்ற குதிரையொன்று சந்தேகம் எழுப்பியது என்று "பைரவி கதை சொன்னாள் " என்ற கதையில் றஞ்ஜனி எழுதியிருக்கும் வரிகளை வாசிக்கும்போது: இன்னும்தான் நமது சமுதாயம் மாறவில்லை என்ற எண்ணம் தான் எனது மனதில் தோன்றியது. இந்தக் கதையில் வரும் பைரவியின் பால்ய வயதில் ஏற்பட்ட பாலியல் சுரண்டலால் காயப்பட்ட பைரவியின் மனதில் அந்த அநுபவம் இன்றும் ஒரு வடுவாக இருப்பதை இக்கதை விபரிக்கிறது. தொடர்ந்து வரும் கதைகளில், "வானவில் போலொரு வாலிபம்" என்ற கதையில் வானவில்லில் உள்ள வண்ணங்களின் கலவை போல, வாலிபப் பருவத்தின் பலவிதமான உணர்ச்சிகள், கனவுகள், திறன்கள், பாலியத்தின் வெளிப்பாடுகள் உரையாடல்களின் வழியாக வாஞ்சையுடன் வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

(வெற்றிமணி பத்திரிகையில் வெளியான சிறுகதை. 01.06.2025)

சில கதைகளில் கூறப்பட்டிருக்கும் மேலதிக விளக்கங்கள் கதைப்புனைவிலிருந்து சற்று விலகி கட்டுரைப் பாங்கில் நகர்த்தப்படுவதைத் தவிர்த்திருக்கலாமோ என எண்ணத் தோன்றினாலும் இந்தச் சிறுகதைத் தொகுப்பை ஒட்டுமொத்தமாக உற்று நோக்கும் போது நல்தொரு சிறுகதைத்தொகுப்பை வாசித்த அநுபவத்தை வாசகர்களுக்கு தருகிறது எனலாம். திறனும் சிந்தனைத் திறனும் தூண்டப்பட்டு, இலக்கிய ஆர்வம் தூண்டப்பட்டு சில சமயங்களில் கதைசொல்லியின் தனித்திறன் மற்றும் படைப்புத் திறன் வியக்கவைப்பதுடன், வாசகருக்கு முழுமையான வாசிப்பு அனுபவத்தையும் அளிப்பதாகும்.

அந்த வகையில் எழுத்தாளர் றஞ்ஜனி சுப்ரமணியம் அவர்கள் இதில் வெற்றிபெற்றிருக்கிறார் என்றுதான் கூறவேண்டும். அவர் மேலும் பல படைப்புகளை இலக்கிய உலகுக்குத் தரவேண்டும் என வாழ்த்துவோம்.








அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்




# பிள்ளையைப் பெற்றுவிட்டால் போதுமா? அன்னை தந்தை

**"தாயிற் சிறந்த கோவிலுமில்லை.
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை...
ஆயிரம் உறவில் பெருமைகள் இல்லை
அன்னை தந்தையே அன்பின் எல்லை"**

உலகத்திலே ஓர் உயிர் அவதரிக்க முடிவெடுத்துவிட்டால், அந்த உயிர் எந்தப் பெற்றோருக்குப் பிறக்க வேண்டும் என்று பிரபஞ்சமே தீர்மானிக்கின்றது. இந்த உயிரின் எதிர்காலப் பயணத்துக்கு எந்தப் பெற்றோர் தகுதியானவர்கள் என்று தெரிவு செய்தே ஒவ்வொரு உயிரையும் தேர்ந்தெடுத்த பெற்றோருக்கு பிரபஞ்சம் அனுப்பி வைக்கின்றது.

**இதனை இதனால் இவன்முடிக்கும்
என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.
- திருக்குறள் - 517**

இந்தச் செயலை, இன்ன காரணத்தால், இவன் செய்து முடிப்பான் என்று ஆராய்ந்து, அந்தச் செயலை அவனிடமே செய்யுமாறு விட்டு விடுதல் வேண்டும் என்பதற்கேற்ப பொருத்தமான பெற்றோருக்கே அக்குழந்தை பிறக்கின்றது. அந்த உயிர் இந்தப் பூமிக்குப் பிறப்பெடுத்த நோக்கத்தைச் சிறப்பான முறையில் செயற்படுத்தப் பெற்றோரின் வழிநடத்தலும் வளர்ப்பு முறையும்சூழலும்எவ்வாறு அமைகின்றதோ, அதற்கேற்பவே அந்தப் பிறவியின் பயனை பிறப்பெடுத்த ஒவ்வொரு உயிரும் அடைய முடியும். எனவே பெற்றொரின் பங்கு பிள்ளைக்கு அவசியமானது.

ஆண்களுடைய மில்லியன்கணக்கான விந்தணுக்களிலிருந்து ஒன்றே ஒன்று பெண்ணின் கருமுட்டைக்குள் சேரும்போது பெண்ணின் கருமுட்டையானது துத்தநாக இரும்புகளை மில்லியன் கணக்காக வெளியேற்றும். அப்போது மின்னல் போன்ற ஒரு தீப்பொறி போன்ற வெளிச்சம் உருவாகும் என்பதை சித்திரை மாதம் 26 ஆம் திகதி 2016 ஆம் ஆண்டு நோர்த் வெஸ்ரன் பல்கலைக்கழகம் ஆய்வின் மூலம் விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றார்கள். இந்த வெளிச்சமே ஒவ்வொரு உயிருடையதுமான வாழ்க்கையின் பிரகாசம். ஒரு மனிதன் பிரகாசமாக வாழ வேண்டியவன் என்பதை தந்தை தாயின் விந்தணுக்களும் கருமுட்டையும் உணர்த்துகின்றன. ஆண்பெண்ணுடைய 46 குரோமோசோம்களில் உயிர் தோன்றிவிடுகின்றது. கருப்பாதையில் செல்கள் ஒவ்வொரு செல்களாகத் தோன்றி ஒன்றொடு ஒன்று சேர்ந்து ஒரு பந்து போல உருவெடுத்து உருண்டு பிரண்டு வந்து கருப்பையை அடைகின்றது. அங்கே ஒரு இருப்பை ஏற்படுத்தி, அங்கிருந்தே வளருகின்றது.


கௌசி
சிவபாலன்
(யேர்மனி)

அவ்வாறே ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் ஒரு இடத்தை மாணிக்கவாசகர் திருவாசகத்தில் பாடியதுபோல சிக்கெனப் பிடித்தல் வேண்டும். இத்துடன் தாயின் கவனஈர்ப்பு பிள்ளையில் படிய வேண்டியது அவசியம். கருப்பை ஆய்வுகூடத்தில்

**உருண்டு சுரண்டு இருகரங் கூப்பிக் கண்மூடி
கருப்பை மண்டலத்தில் தவமிருந்து – என்
பத்துமாதக் கற்பித்தலைக் கற்றாய்
என்நோய் என்குணம் என்பிரதியாக
எழுவாயென்று மனத்தால் கையெழுத்திட்டாய்**
- பனிக்குடம் -



**வெற்றிமணியில் தொடர்ச்சியாக எழுதிவரும் கௌசி சிவபாலன் அவர்களது 101 வது கட்டுரை இது. வெற்றிமணிக்கான சில மாற்றம் தேவை என்றால், பத்திரிகையின் உள்ளடக்கத்தைக் கருத்தில் கொண்டு, கருத்து திரிபடையாது, தன்படைப்பை தருவதில் வல்லவர். குறித்த நேரத்தில் தருவதில் அவருக்கு நிகர் அவரே. உயரும் நேரப்பழுக்களுக்கு மத்தியிலும் இது சாத்தியம் என்றால் இது சத்தியவாசகமே. மாதம் ஒரு கட்டுரை. அதற்கு தலைப்புக்கான பெயர் சூட்டி மகிழும் உரிமை எனக்கானதில் கிட்டும் ஆனந்தம் அது தனிரகம்.**

எனப் பெற்றோரின் மரபணுக்களில் தாயின் கருப்பையினுள்ளேயே பிள்ளை கற்கத் தொடங்குகின்றது என்பதை பிரகலாதன் கதை சான்று பகிர்கின்றது. அதேபோல் "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" என்பதைப் பிள்ளைகள் உணர்ந்து கொள்ள வேண்டும். பிள்ளையைச் சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடமை. ஈன்று புறந்தருதல் அன்னைக்குக் கடமை என்று பொன்முடியார் புறநானூற்றில் பாடியது போலத் தாய் தன்னுடைய குழந்தையை பெற்றெடுத்துப் பேணி பாதுகாப்பாள். திருமூலர்

**"உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன்"**

என்பார்.

சுவர் இருந்தாலே சித்திரம் வரைய முடியும் என்கிறது பழமொழி. குழந்தைக்குச் சற்று முகம் வாடினால் ஒரு தாய் துடித்துப் போவாள். கொழுகொழு என்று இருக்கும் பிள்ளையையும் "என்னப்பா வாடிப் போய்விட்டாய்" என்று ஊட்டி வளர்க்கின்ற பண்பு தாய்க்கேயுரியது. தேகாரோக்கியமுள்ள பிள்ளையே மூளைச் செல்களை முறையாக இயங்கச் செய்து அறிவாளியாகவும் முடியும். அவ்வாறு உடல் வளர்த்து உயிர் வளர்ப்பவள் தாய்.

சிறுவயதிலிருந்து அறிவுரை கூறி வளர்த்த நரேந்திரனே விவேகானந்தரானார். துடிப்போடு குழப்படி செய்த பிள்ளை மயில்வாகனை சுவாமி விபுலானந்தராக்கியதும் அன்னையே. பெற்ற பிள்ளையில் பாசம் வைக்கும் தந்தை பற்றி சங்கப் பாடல் ஒன்றில் கபிலர் அழகாகச் சொல்கின்றது.

**"எந்தை நிலன் உறப்பெறான், சீரடி சிவப்ப
எவன் இல! குறுமகள்! இயங்குதி என்னும்"
- அகநானூறு 12:2**

என்னுடைய சிறிய மகளே உன்னுடைய சிறிய அடி சிவக்க ஏன் அங்குமிங்கும் திரிகிறாய் என்று கேட்கும் போது தன்னுடைய மகள் நடப்பதால் பாதங்கள் சிவந்து போகின்றன என்று எண்ணும் தந்தைகளையே பிள்ளைகள் பெற்றிருக்கின்றார்கள்.

ஆயிரம் கோடிகளை அள்ளிக் கொடுத்தாலும் கிடைக்காத வாகனமே தந்தையின் தோள்கள், தோளில் தூக்கி வைத்து உயரத்தைக் காட்டும் போது எமக்குத் தெரிவதில்லை எம்மை வளர வைத்துப் பார்க்கின்றார் என்னும் சமிக்ஞையை.

28 ஆம் பக்கம் பார்க்க...






உலகெங்கும் வாழும் தமிழ் மக்கள்
நீங்கள் வாழும் இடங்களில் ஆலயம்
அமைக்க, அல்லது உள்ள ஆலயங்களில்
சிற்பவேலைகளை கலைநுணுக்கத்துடன்
அமைக்க எம்மை நாடுங்கள்.

சிற்பாச்சாரியார் விஸ்வப்பிரம்ம
திரு.தங்கராசு.பாலமுருகன்.
தலைச்சங்காடு
தமிழ்நாடு.இந்தியா



Tel:00918838751124

e.Mail: bvsaa2007@gmail.com



# கை தட்டினால், இரத்தம் பாயும் தெரியுமா?

மங்கை அரசி (யேர்மனி)

உள்ளங்கைகளில், இரத்த நாடி, நாளங்கள், நரம்பு நுனிகள் என்பன அமைந்து ள்ளன. 30க்கு மேற்பட்ட வர்ம புள்ளிகள் உள்ளன. அவற்றை தூண்டுவதன் மூலம் நமது முழு உடலையும் புத்துணர்வுடன் வைத் திருப்பதற்கான இரத்த ஓட்டத்தை விரிவுபடுத் திக் கொள்ளலாம். அது மட்டுமல்லாமல், மன ஓட்டம் சீராக அமையவும், பதற்றம் அழிந்து போகவும், நேர்மறை சிந்தனைகள் புதிதாக ஏற்படவும், மனச்சோர்வு இல்லாமல் போவத ற்கும், இரத்த அழுத்த சிக்கல் இல்லாமல், இதய நோய், சுவாசக் கோளாறு போன்ற நோய்கள் வராமல், நோய் எதிர்ப்பு சக்திகள் அதிகரிப்பதற்கும் மற்றும் நோய் தொற்றிலிருந்து தப்புவதற்கும், அறிவு ஆற்றலை கூட்டுவதற்கும், கவனச் சிதறல்கள் மற்றும் கட்டுப்பாடு இல்லாத பழக்கவழக்கங்கள் மற்றும் முதுகு வலி என்பவற்றை அகற்றுவதற்கும், உற்சாகமாக செயற்படவும், கல்வியில் முன்னேறுவதற்கும், எலும்புகளை சீராக்கி உறுதியாக்கி மற்றும் உரோமக்கலன்களை புத்துணர்ச்சி செய்ய வைத்து உடலில் புதிய உரோமங்களை உருவாக்குவதற்கும், முடி உதிர்வதை போக்குவதற்கும் இந்த உள்ளங்கை மிக மிக ஒரு முக்கியமான செயற்பாட்டை செய்து கொண்டிருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்களா?

ஆம், எம் இரண்டு கைகளையும் மேலே தூக்கி வானத்தைப் பார்க்கும் வகையில், உள்ளங்கையை மேல் நோக்கி மடித்து வைத்து பார்த்தீர்கள் என்றால், எமது உடலின் நான்கு பகுதிகள் வெளியே நீட்டிக்கொண்டு இருப்பது தெரியும். அதாவது இரண்டு உள்ளங்கைகளும், இரண்டு உள்ளங்கால்களுமே ஆகும். இதில் உள்ளங்கையில் அழுத்தங்கள் கொடுப்பதன் மூலமாக, நமது கொடுப்பதனால், நமது உடலின் ஒவ்வொரு பகுதிகளையும் சீராக்கிக் கொள்ளலாம், என்பதும் அறிவியல் உண்மை. உள்ளங்காலை பற்றி தெரிந்துகொள்ள விரும்பினீர்கள் என்றால், அறியத்தாருங்கள், அடுத்த கட்டுரையில் பார்ப்போம். உள்ளங்கையில் எவ்வாறு அழுத்தங்கள் கொடுக்க



உடலின் ஒவ்வொரு உறுப்புகளையும், ஒவ்வொரு பகுதிகளையும் எம்மால் சீராக்கிக் கொள்ள முடியும் என்பதும், உள்ளங் காலில் அழுத்தங்கள் கொடுப்பதனால், பயிற்சிகள் முடியும் என்றால், தினமும் சில நிமிடங்கள் கைக ளை தட்டுவதன் மூலமாக, கைகளை ஒன்றோடு ஒன்று உரசுவதன் மூலமாக, கைகளில் ஒவ்வொரு பகுதிகளையும் அழுத்துவதன் மூலமாக, நமது சிந்தனையை முழுமையாக உள்ளங்கையில், விரல்களில் ஒவ்வொரு பகுதிகளிலும் செலுத்தி, ஒவ்வொரு பகுதிகளையும் நன்றாக மசாஜ் செய்து விடுவதன் மூலமாக, ஆரம்பப்பந்தியில் குறிப்பிட்ட எல்லா நன்மைகளையும் பெறலாம். உள்ளங்கையில் உள்ள இரத்த நாளங்களை, நாடிகளை உற்சாகப் படுத் துவதன் மூலமாக, உடல் முழுவதும் ரத்த ஓட்டத்தை அதிகரித்து, பலனடைந்து கொள்ளுங்கள். ஒரு வாரம் பயிற்சி செய்து பார்த்து, உங்கள் பலனை எங்களுக்கு அறிய தாருங்கள். தெரிந்து கொள்வதற்கு ஆவலாக காத்துள்ளோம்.






அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



# மந்திரிமனை மீள் புனரமைப்பில் உள்ள சிக்கல்கள் என்ன!!

## யாழ்ப்பாணத்தின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மந்திரி மனையின் ஒரு பக்கம் இடிந்து விழுந்தது.

மந்திரி மனையின் ஒரு பக்கம் 17.09.2025 இடிந்து விழுந்துட்டு, சரின்னு விசாரிச்சா..

அது தனியாரின் உறுதி காணிக்குள் உள்ள தனியார் சொத்தாம். அவரின் அனுமதியின்றி ஒரு செங்கல்லை கூட அங்கே நாட்ட முடியாதாம்.

2011ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட வேண்டிய தொல்லியல் சின்னமாக வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது அன்றில் இருந்து அப்போதைய வடமாகாண சபை முதல், 14 வருடங்களாக மாறி மாறி வரும் வடமாகாண ஆளுநர் , மாவட்ட செயலர்கள் , தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் என காணிக்கு சொந்த காரருடன் பல தடவைகள் பேசியும் பயனில்லையாம்.

மந்திரிமனையில் கை வைக்குறது என்றால் ,சட்டநாதர் சிவன் கோவிலுக்கு முன்பாக செல்லும் பருத்தித்துறை





வீதியை ஆலயத்தினை சுற்றி செல்லுமாறு அமைக்க வேண்டும். ஆலயத்திற்கு முன்பாக போக்குவரத்திற்கு தடை விதிக்க வேண்டும்.ஆலயத்திற்கு முன்பாக உள்ள இரண்டு மாடி மண்டபத்தை இடித்து அகற்ற வேண்டும் என பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தாராம். அது எதனையும் செய்யும் அதிகாரம் தொல்லியல் திணைக்களத்திற்கு இல்லாததால், அவரின் கோரிக்கையை நிறைவேற்ற முடியவில்லை.

இந்த நிலையில் தான் ஒரு பக்க சுவர் இடிந்து விழ போகுதே என 19 கம்பிகளை கொண்டு, காணி உரிமையாளரின் அனுமதி இன்றி தொல்லியல் திணைக்களம் அடாத்தாக கம்பிகளை நட்டு முட்டுக்கொடுத்து வைத்தார்களாம் அதனையும் யாரோ திருடி சென்று விட்டார்களாம். கம்பிகளால் முட்டுக்கொடுக்கப்பட்டு இருந்த பகுதியே இன்று இடிந்து விழுந்துள்ளது. கம்பி களவு போட்டு என பொலிஸில் முறைப்பாடு செய்திருக்காம். பொலிஸ் தரப்பு கம்பியை கண்டு பிடிக்க தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகிறதாம் இப்ப கட்டடம் இடிந்து விழுந்து போச்சு,தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் பேசி ஆலோசனைகளை பெற்று,அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் முடிவெடுக்கப்படவுள்ளதாம்.

மந்திரிமனையை புனரமைக்க ஒரு தன்னார்வ கொடையாளி 50 இலட்சம் ரூபாயை வழங்கிய நிலையில், உரிமையாளரின் அனுமதிக்காக 2 வருடங்களாக முயற்சித்தும் பயனில்லாததால், அந்த நிதியை கொடையாளியிடமே திருப்பி கொடுத்தாச்சாம்.

உலக வங்கி நிதியுதவி வழங்க முன் வந்ததாம். உலக வங்கியிடம், தனிநபர் சொத்துக்கு நீ எப்படி காசு கொடுப்பாய் என உரிமையாளர் கேட்டதால், அந்த உதவியும் நின்று போச்சாம். சரி காணியை ஒரு விலை யை பேசி வாங்கி விடுவோம் என 3 கோடி ரூபாய் வரை பேரம் பேசப்பட்டதாம். உரிமையாளர் காணியை விற்கும் எண்ணம் இல்லை என ஒரு சொல் தானாம். இப்ப என்னடா என்றால், தொல்லியல் சின்னம் , தமிழர்களின் அடையாளம் என கொண்டாடும் நீங்கள் அந்த தனிநபரிடம் இருந்து மந்திரிமனையை பாதுகாக்க தொல்லியல் திணைக்களத்திற்கு அனுமதி பெற்று தாங்க என தொல்லியல் திணைக்களம் கையை நீட்டியுள்ளது. ஆள் யாழ்ப்பாணத்திலே தானாம் தேடி கண்டுபிடிச்சு பிரச்சனையை பேசி முடிச்சு வையுங்கடாப்பா ...

இது கூட மழைக் குளிருக்கு மிக்ஸரும் டீயும் நல்லா இருக்கும் என தோணியதால், நல்லூரடியில் மிக்ஸர் வாங்க போன போது, மந்திரி மனையில் டீம் நின்றத பார்த்துட்டு இறங்கி விசாரிச்சா போது, எடுத்த தகவல் தான்.

**(நன்றி:மயூரப்பிரியன் முகப்புத்தகம் ஈழத்து வரலாறும் தொல்லியலும்)**

**வாகீஸ்வரன் ரேகா தம்பதிகள்**

பரமேஸ்வரன் ஸ்ரீலதா தம்பதிகளின் புதல்வன் தொழிலதிபர் ப.வாகீஸ்வரன் அவர்களுக்கும், வெற்றிமணி பத்திரிகையில் நீண்டகாலமாக எழுதிவரும் எழுத்தாளர், கோவிந்தராஜா உதயமலர் தம்பதிகளின் புதல்வி பொலிகையூர் ரேகா அவர்களுக்கும் கடந்த 07.09.2025 இங்கிலாந்தில் திருமண வைபவம் இனிதாக நடைபெற்றது.

**இந்த அழகிய தருணத்தில், மணமக்களை வெற்றிமணிப் பத்திரிகை வாழ்த்தி மகிழ்கின்றது.**




**மணமகன் தேவை**



யேர்மனியில் Wirtschafts ingenieur Master படிப்பைத் தொடங்கியுள்ள 36 வயது நற்குணமுள்ள சைவ வேளாள பெண்ணிற்கு பொருத்தமான பட்டதாரி மணமகனை பிறாங்பேட் சுற்று வட்டத்தில் எதிர்பார்க்கும் பெற்றோர்.
49 1577 43 18 528

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்
IMTC ஐரோப்பிய ஒன்றியம்
EV-21116



குறள் 975:
பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்.

**52 ஆவது ஆண்டு எழுச்சி மாநாடு மற்றும் மாபெரும் செந்தமிழ் கலை மாலை 2025**

**25/10/2025 2:00 PM**

இடம்: KOPPERNIKS GYMNASIUM AULA
KOPPERNIKUS STR-61
48429 RHEINE, GERMANY
தொடர்புக்கு:017632075528
015218626482

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



# பரிஸில் 35 ஆயிரம் மக்கள் திரண்ட லாசப்பல் ஸ்ரீ மாணிக்க விநாயகர் தேர்த்திருவிழா

எஸ்.கே.ராஜென்

பரிஸ்,பரிஸ் புறநகரங்கள், பிரான்ஸின் ஏனைய பகுதிகள், ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடா ஆகிய நாடுகளிலிருந்து பரிஸில் 35 ஆயிரம் மக்கள் திரண்டு,பரிஸ் லாசப்பல் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய 28வது தீர்த்திருவிழாவைக் கண்டுகளித்தனர். அமரத்துவமடைந்துவிட்ட அளவெட்டி வைத்திலிங்கம் சந்திரசேகரம் தனது அயராத முயற்சியால் உருவாக்கியதே இந்த ஸ்ரீமாணிக்க விநாயகர் ஆலயம். இவர் தனது சொந்தப்பணத்தில் 1983ம் ஆண்டு ந்த ஆலயத்தை அமைத்தார். 1984ம் ஆண்டு பஞ்ச உலோகத்தால் வடிக்கப்பட்ட ஸ்ரீ மாணிக்க விநாயகர் திருவுருவச்சிலை கொழும்பு லீலா நிறுவன அதிபர் தேசபந்து அவர்களால் விமானம் வழியாக பரிஸ் நகரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

1984 பெப்ருவரி 4ம் திகதி தைப்பூச நாளில் Maison de l'Inde, Cité International Université - பிரிஸிலுள்ள இந்திய கலாசார மண்டபத்தில் விநாயகர் பூசை ஆரம்பித்தது. இது வாரம் தோறும் நடைபெற்றது. இங்கு பரதம், இசைக்கச்சேரி போன்ற கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்று வந்தன.

1986 முதல் 1992 வரை பரிஸ் 11ல் அமைந்த ஒரு சிறிய மண்டபத்தில் இரண்டு காலப் பூசைகள் நடைபெற்று வந்தன. வெள்ளி, சனி, ஞாயிறு நாள்களில் ஆலயத்தில் அன்னதானமும் நடைபெற்று வந்தது. இந்து மதத் தலைவர்கள், கலை, கலாசாரத் தூதுவர்கள், இலங்கை, இந்திய நாடுகளின் பிரான்ஸ் நாட்டுத் தூதுவர்கள் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண்டிருந்தனர். 1988ம் ஆண்டு இலங்கைக்கலையகத்தால் பரிஸு'க்கு இசை நிகழ்ச்சிக்காக வரவழைக்கப்பட்டிருந்த 'இசையரசர்' ரி.எம். சௌந்தரராஜன் இவ்வாலயத்துக்குச் சென்று பக்திப்பாடல்பாடி வழிபாடு மேற்கொண்டிருந்தமை வரலாறு. இலங்கைக்கலையகத்தின் சார்பில் ரி.எம். சௌந்தரராஜனை இரா.சிறிதரன் ஆலயத்துக்கு அழைத்துச் சென்றிருந்தார்.

1992ம் ஆண்டு முதல் பரிஸ் லா சப்பல்



அருகாமையில் ஆலயம் அமைந்தது. பூசைகள், அன்னதானம் என்பன நடைபெற்று வந்தன.

1995ம் ஆண்டு முதல் நித்தியபூசைகள் நடைபெற்றன. சூரன் போர், தயிர் முட்டிப் பூசை, விஷ்ணு பூசை, கந்தசஷ்டி, கேதார கௌரி விரத பூசை, திருவெம்பாவை பூசைகள் என யாவும் நடைபெற்றன. தேர்த்திருவிழாவும் நடைபெற்றது. முருகன், வள்ளி, தெய்வானை திருச்சுருவங்கள் சந்திரசேகரத்தின் சகோதரி மகேஸ்வரி கோபாலசாமி, அவரது குழந்தைகள் ஆகியோரால் கும்பகோணம் சாமிமலையில் வடிவமைக்கப்பட்டு திருக்கோவிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.1999ம் ஆண்டு செப்ரம்பர் 12ம் திகதி முறைப்படி ஆலயத்தின் 4வது தேர்த்திருவிழா நடைபெற்றது.

2000 ஆண்டில் முருகன், வள்ளி, தெய்வானை என்று புதிதாகத் தேர் அமைத்து இரண்டு தேர்கள் வீதியுலா வந்தன. ஐரோப்பாவில் இரண்டு தேர்கள் வீதியுலா வந்த பெருமையை ஸ்ரீமாணிக்க விநாயகர் ஆலயம் பெற்றது. இந்த ஆண்டில் கந்த ஷஷ்டி திருவிழா, முருகன் திருக்கல்யாண உற்சவம் என்பன நடைபெற்றன.

2001ம் ஆண்டு ஆலயத்தின் 6வது தேர்த்திருவிழா தமிழ் ஊடகங்கள், பிரான்ஸ் ஊடகங்கள் என்பனவற்றின் கவனத்தை ஈர்த்தது. நேரஞ்சல்களும் நடத்தப்பட்டன. 15000 வரையான மக்கள் தேர்த்திருவிழாவில் பங்கு பற்றியிருந்தனர்.தமிழ்ப்பத்திரிகைகள்,பிரெஞ்சுப்பத்திரிகைகள் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலய 6வது தேர்த்திருவிழா பற்றிச் செய்தி வெளியிட்டிருந்தன.

பரிஸில் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தை நிறுவிய வைத்திலிங்கம் சந்திரசேகரம் 2002ம் ஆண்டு சென்னையில் அகோலபீடம் ஜீயர்ஸ்வாமிகளால் 'அருட்பணி அரசு' என மாண் பேற்றப்பட்டார்.

2002ம் ஆண்டு 7வது தேர்த்திருவிழா, 2003ம் ஆண்டு 8வது தேர்த்திருவிழா, 2004ம் ஆண்டு 9வது தேர்த்திருவிழா

28 ஆம் பக்கம் பார்க்க...








அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



# நேபாளம், வங்காளம், இலங்கை ஆட்சி மாற்றத்தில் சக்திமிகு இளைஞர் போராட்ட மூலோபயம்

**இலங்கை, வங்காளம் மற்றும் நேபாளம் ஆகிய மூன்று நாடுகளின் போராட்டங்களுக்கான காரணங்கள் வேறுபட்டிருந்தாலும், மக்கள் எதிர் பார்ப்புகளுக்கும் அரசின் செயல்பாடுகளுக்கும் இடையே உள்ள இடைவெளிதான் இந்த போராட்டங்களுக்குப் பொதுவான காரணம் ஆகும். இந்த மூன்று ஆட்சி மாற்றத்தின் மிகப் பெரிய பங்கை வகித்தவர்கள் இளைஞர்களே. இந்த அரசுகள் இளைஞர்களின் கோபத்தைத் தணிக்க முயற்சி செய்யாவிட்டால் மேலும் போராட்டங்கள் தொடரக்கூடும்**

இலங்கை, வங்காளம் நாடுகளைத் தொடர்ந்து தற்போது நேபாளத்திலும் அரசுக்கு எதிரான மக்கள் போராட்டத்தின் காரணமாக ஆளும் கட்சி ஆட்சியை விட்டு துரத்தப்பட்டுள்ளது.

### சமூக வலைத்தள தடை:

நேபாளத்தில் இளம் போராட்டக்காரர்கள் பிரதமர் இல்லத்தை அடித்து நொறுக்கி உள்ளனர். பாராளமன்றத்தை தீ வைத்து கொளுத்தி உள்ளனர். இதையடுத்து நேபாள அதிபர், பிரதமர் ஆகியோர் ராஜினாமா செய்தனர். நேபாள பிரதமர் தப்பியோடி உள்ளார். நேபாளத்தில் கடந்த 17 ஆண்டுகளுக்கு முன்னர் 2008-ம் ஆண்டு மே மாதம் இந்து மன்னராட்சி முடிவுக்கு வந்தது. கடந்த 239 ஆண்டுகளாக இருந்து வந்த மன்னராட்சியை அகற்ற வலியுறுத்தி பல ஆண்டுகளாக நடந்த போராட்டத்துக்கு அப்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆனால் அப்போராட்டத்தில் 16,000 மக்கள் உயிரிழந்தனர். நேபாளம் தற்போது வரலாறு காணாத போராட்டங்களால் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. இந்த போராட்டங்களை வழிநடத்துபவர்கள் வேறு யாருமல்ல, சமூக



ஊடகங்களில் கொடிகட்டிப் பறக்கும் Gen Z என்ற (ஜெனரேஷன் Z) இளைஞர்கள் தான்.

### தெற்காசியப் புவிசார் அரசியல்:

பொதுவாக 1997 முதல் 2012 வரை பிறந்தவர்கள் ஜென் Z தலை முறையினர் என்று நேபாளத்தில் வரையறுக்கப்படும் இளைஞர்கள், வேலையின்மை, வறுமை, மற்றும் அரசின் அப்பட்டமான ஊழல்கள் என பல்வேறு பிரச்சனைகளால் அவர்கள் விரக்தியின் உச்சத்தில் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நேபாளத்தில் நடந்த போராட்டத்தின் காட்சிகள், கடந்த ஆண்டு வங்கதேசத்தில் நடந்த போராட்டத்தை நினைவூட்டின. இதற்கு முன்னர் 2022ஆம் ஆண்டில் இலங்கையிலும் இளைஞர்கள் அரசுக்கு எதிராக பெரிய போராட்டங்களை நடத்தினர். நேபாளத்தில் மற்றொரு நெருக்கடி என்னவென்றால், முடியாட்சி முடிந்த பிறகு எந்த ஒரு அரசாங்கமும் ஐந்து ஆண்டுகள் முழுமையாகப் பதவியில் இல்லை. இதன் காரணமாக நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை நிலவுகிறது, மேலும் ஊழல் குற்றச்சாட்டுகளும் தொடர்ந்து எழுகின்றன.



ஐங்கரன் விக்கனேஸ்வரா

### Gen Z இளைஞர் புரட்சி :

நேபாள அரசு, முகநூல்,இன்ஸ்ராகிராம், யூடியூப் (Facebook, Instagram, YouTube) உள்ளிட்ட 26 முக்கிய சமூக ஊடக தளங்களுக்குத் தடை விதித்ததால் தான் இந்த ஆவேசப் போராட்டம் வெடித்தது. இந்த தளங்கள் நேபாள அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்படாததே தடைக்கான காரணம் என அரசு கூறினாலும், இளைஞர்கள் இதை நம்பவில்லை. ஆயினும் உண்மையான காரணம் பல ஆண்டுகளாக நேபாள இளைஞர்கள் மனதில் குமுறிக் கொண்டிருந்த கோபம்தான் இந்த போராட்டம். வேலையின்மை, வறுமை, மற்றும் அரசின் அப்பட்டமான ஊழல்கள் என பல்வேறு பிரச்சனைகளால் அவர்கள் விரக்தியின் உச்சத்தில் இருந்தனர். இதற்கிடையில், நேிழமுனை (ஊழல் பிள்ளைகள்) என்ற ஹேஷ்டேக் சமூக ஊடகங்களில் பரவி, அரசியல்வாதிகளின் ஆடம்பர வாழ்க்கை முறையையும், சாதாரண மக்களின் வறுமையையும் ஒப்பிட்டு, அவர்களின் கோபத்தை மேலும் தூண்டியது.

நேபாள அரசு, கடந்த வாரம் செப்டம்பர் 4-ஆம் திகதி முதல் 26 சமூக ஊடக தளங்களுக்குத் தடை விதித்தது. தகவல் தொடர்பு அமைச்சகத்தில் பதிவு செய்ய தவறியதே இதற்கு முக்கிய காரணம் என அரசு கூறியது. ஆனால், இது கருத்து சுதந்திரத்தை நசுக்கும் முயற்சி என போராட்டக்காரர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இந்தத் திடீர் சமூக ஊடகத் தடை, ஏற்கெனவே ஊழல் மற்றும் பொருளாதார பிரச்சனைகளால் கோப த்தில் இருந்த நேபாள இளைஞர்களை, வீதியில் இறங்கி போராட தூண்டிய ஒரு முக்கியமான காரணமாக கருதப்படுகிறது.

### பங்களாதேஷ் மாணவர் எழுச்சி:



தென்னாசிய பொருளாதர வளர்ச்சியில் இந்தியாவுக்கு மேலாக உயர்ந்த நிலையில் இருந்த வங்க தேசம் கடந்த ஆண்டு பொருளாதர வீழ்ச்சியை அடைந்தது. வளர்ந்து வரும் அபிவிருத்தியில் 455 பில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட பங்களாதேஷ், பிரச்சனையில் இருந்து வெளியேறுவது பெரும் சிக்கலாக இருந்தது. மாணவர்கள் பங்களாதேஷில் 2024 ஜ“லை மாத தொடக்கத்தில் நாடு முழுவதும் பல வாரங்களாக தொடர்ந்த புரட்சி சொந்த நாட்டின் அரசையே ஆட்டங்காண வைத்தனர். அதேவேளை அந்நாட்டின் வர்த்தகம் மற்றும் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டது என்பதும் உண்மைதான்.

28 ஆம் பக்கம் பார்க்க...



## நன்றி நவிலல்

**அமரர் மா.வாசுதேவன் (வாசு)**
**21.06.1949 - 25.08.2025**

தாயகத்தில் வறுத்தலைவிளானை பிறப்பிடமாக் கொண்டவரும்,
யேர்மனியில் சுவற்றா நகரிலும்,பின்னர் Aplerbeck நகரிலும் வாழ்ந்தவருமான
திரு. மா. வாசுதேவன் (வாசு) அவர்கள் தனது 76வது வயதில் (25.08.2025) காலமானார்.

அமரர் வாசுதேவன் அவர்கள், யேர்மனி ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலய நிர்வாக சபையில்,
ஆரம்பகால உறுப்பினரும் பல முக்கிய பதவிகளில் இருந்து நற்சேவைகள் புரிந்தவருமாவர்.

அன்னாரின் மறைவு அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும்,
ஈமக்கிருகைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசியில் இரங்கல் தெரிவித்த அன்புள்ளங்கள்
அனைவருக்கும் எமது குடும்பசார்பாக நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அன்புடன் மனைவி,மக்கள், மருமக்கள், பேரக்குழந்தைகள், சகோதரர்கள்- யேர்மனி**

அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# Allianz




**Piratheeb Pathmanathan Allianz**
வாடிக்கையாளர்கள் தொடர்பு இலக்கம்: 0151 240 33 546

## நான் எந்தக் கார் காப்பீட்டு நிறுவனத்தையும் வெல்லவே முயல்வேன் நிச்சயமாக!

## எங்களிடம் மாறினால் ஒவ்வொரு காப்புறுதியிலும் வருடம் 300 Euro க்கும் அதிகமான பணத்தினை சேமிப்பதற்கு நாங்கள் உதவுவோம்



உங்களிற்கு நான், அனைத்து வாகனக் காப்புறுதிகளின் ஒப்பிடுகையில் சிறந்ததைத் தருவேன் என்பது உறுதி!

உங்கள் கார், வீடு, ஆரோக்கிம் அல்லது ஓய்வூதிய திட்டம் என எதுவாக இருந்தாலும், அதற்கான சிறந்த தீர்வை நான் கண்டுபிடிப்பேன். கட்டணரீதியாக மற்றும் சேவைரீதியாக, மற்றைய வாகனக் காப்பீட்டையும் விட மிகச் சிறந்ததை, நான் தருவேன்.



அத்தோடு, எம்நாட்டவருக்கு தமிழில் உதவவும், எதிர்காலத்தில் இணைந்து உயரவும் மற்றும் புதிய புதிய வாய்ப்புக்களை உருவாக்கவும் அதிக ஆர்வம் கொண்டுள்ளேன்.

### உங்கள் Allianz காப்புறுதி முகவர்

காப்புறுதி இன்று வழமையைவிட மிகவும் அத்தியாவசியமானதாகிவிட்டது.

முற்பாதுகாப்பு செய்தவரே, தன் வாழ்க்கையை கடினமின்றி நடத்த முடியும் எதிர்பாராத சூழ்நிலைகள் அல்லது விதி தனது எதிர்காலத்தை பொருளாதார ரீதியாக பாதிக்கும், என்ற பயமின்றி.



Allianz பிரதிநிதியாக, உங்கள் பாதுகாப்பு, முன்னேற்றம் மற்றும் உங்கள் சொத்துப் பெருக்கம் தொடர்பான அனைத்து விடயங்களிலும், நான் உங்கள் நம்பகமான நபராவேன்.

உங்களிற்கு தேவைகள் எப்போதும் வரலாம், அதனாலேயே எனக்கும் விடுமுறைகள் கிடையாது நீங்கள் வாரத்தின் ஏழு நாட்களும் என்னை தொடர்புகொள்ளலாம்.



### என் நோக்கம்:

ஆரோக்கியம் என்ற அளவற்ற செல்வமும், பாதுகாப்பு என்ற அத்திவாரமும் கொண்டு நம் வளமான வாழ்வை கட்டியமைத்தல்.

திறமையும் மற்றும் உண்மையான பொறுப்புணர்வும் உள்ள ஒரு பங்குதாரரைத்தான் நீங்கள் நம்ப வேண்டும்.

---

நீங்கள் என் அலுவலகத்திற்கு வருவது, என்னையும் உங்களையும் மகிழ்விக்கும்!

Allianz பொதுமுகவர்: ______________________

Edmund-Weber-Str. 204, - 44651 Herne | [015124033546] | [p.pathmanathan@allianz.de]

# மலையக மாணவர் கல்விக்கு கைகொடுத்த வெற்றிமணி















இலங்கையின் அழகிய எழில் கொஞ்சும் மலையகத்தின் நுவரெலியா பிரதேசத்தின் சென் கிளையார் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் பயனடையும் வகையில் யேர்மனியில் இருந்து வெளிவரும் வெற்றிமணி பத்திரிகை மற்றும் ஜெஸ்மின் சில்க் ஹவுஸ் வியாபார ஸ்தாபனமும் இணைந்து,

நவீன டிஜிட்டல் கல்விக்கு வசதி அளிக்கும் வகையில் ஸ்மார்ட் டிவி (திறன் பலகை) ஒன்றை கையளித்திருந்தனர்.

இதனூடாக இம்மாணவர்கள் மிக ஆர்வமாக கற்பதை அவதானிக்க முடிகின்றது எதிர்கால கல்வி வளர்ச்சிக்கு இவ் உதவி பெறும் பங்காற்றும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. நீங்கள் கல்வி புலத்திற்கு நல்கும் இவ்வாறான பயன்கள் எமது கல்வி சமூகத்தை கடைத்தேற்றும் ஆயுதமாக அமையும். எனவே இது போன்ற தங்களின் உதவிகள் எதிர்வரும் காலங்களிலும் எமது தமிழ் பிரதேச மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக அமையும்.

வெற்றிமணி மாணவர் சஞ்சிகையாக 1950 ஆண்டு நாவலப்பிட்டி நகரில் ஆரம்பிக்கபட்டது. அமரர் மு.க.சு.சுப்பிரமணியம், அவர்களும், அவர் மனைவி நவநிதி சுப்பிரமணியம் அவர்களும், ஆசிரியராக 1950 ஆண்டு நாவலப்பிட்டி கதிரேசன் பாடசாலையில் கல்வி கற்பித்த வேளை மலையக மாணவர்களின் முன்னேற்றம் கருதி வெற்றிமணி மாணவர் சஞ்சிகையை ஆரம்பித்து வைத்தார் என அறிகிறோம். அந்த வழியில் 75 வருடங்களுக்கு பின்னரும் மலையக மாணவர்கள் கல்விக்கு முன்னுரிமை தரும் வெற்றிமணி பத்திரிகையின் செயற்பாடுகளும் தந்தை வழியில் பயணிக்கும் மகனின் பேரார்வமும் மகிழ்ச்சி அளிக்கிறது.

தங்களின் மகத்தான இச் சேவைக்கு மனதார நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கின்றது.

நுவரெலியா, தலவாக்கலை சென்கிளேயர் தமிழ் மகா வித்தியாலயம், சமூகமும். 19.09.2025

-கண்மணி இலங்கை-

## நாடு கடந்தும் உதவி கரம் நீட்டும் நலன் விரும்பியே....

– கண்மணி (இலங்கை)

நாங்கள் செய்த
புண்ணியம் புரிகிறது...
தாங்கள் நல்கிய
திறன் பலகை
பாவனையில்...

நவீன கற்றலை
ஈழத்திலும் விதைப்பதில்
தன்னை இணைத்து
கொண்டவர்களே...
இன்னும் இன்னோரன்ன
தேவைகளில் உங்கள்
பெயர்கள் மீண்டும்
நிலைக்கட்டும்...

சிறார்கள் சிந்தனை
துலங்கி சிரித்து
மகிழவே
சிந்தித்து
செயல் பட்டவர்களே...

நீங்கள் எட்டாத
தூரத்தில் என்றாலும்
எம் மாணவர் தேவை
அறிந்து எண்மானம்
கற்க செய்தீரே..

என்றும் எங்கள்
சிரம் தாழ்த்திய நன்றிகள்
நட்புறவுகளே...

24 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பரிஸில் 35 ஆயிரம் மக்கள் திரண்ட

எனத்தொடர்ந்தது. 9வது தேர்த்திருவிழாவில் 20ஆயிரம் மக்கள் பங்குபற்றினர். 2005ம் ஆண்டு 10வது தேர்த்திருவிழாவில் 25ஆயிரம் மக்கள் கலந்து கொண்டார்கள்.

கடந்த 31.08.2025 அன்று 28வது தேர்த்திருவிழா நடைபெற்றது. 35ஆயிர த்துக்கும் மேற்பட்ட மக்கள் பங்கு பற்றினர். பரிஸ் லா சப்பலில் மக்கள் வெள்ளம் காணப்பட்டது. தேரேறி வீதியுலா வந்த விநாயகப் பெருமானை மக்கள் வீதிகள் தோறும் நின்று வழிபட்டனர்.

லா சப்பல் பகுதி ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத் திருவிழாவுக்காக அலங்கரிக்கப் பட்டிருந்தன. வீதிகளில் வர்த்தக நிலையங்கள் முன்பாக மண்டகப்படி வைத்து பெரும் தொகையான தேங்காய்கள் அடிக்கப்பட்டன. பரிஸ் 18, 10 நகரசபைகள், காவல்துறையினர் ஆலய நிர்வாகிகளுக்கு தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கியிருந்தனர்.

தேர்த்திருவிழாவுக்காக பரிஸ் 10, பரிஸ் 18 வீதிகளில் போக்குவரத்துக்கள் நிறுத்தப்பட்டிருந்தன. எந்த நாட்டிலும் இல்லாத சிறப்பு பிரான்ஸ் நாட்டில் விநாயகர் பக்தர்களுக்குக் கிடைத்திருக்கின்றது.

தேர்த்திருவிழா மாலை 3 மணிக்கு நிறைவடைந்த பொழுதிலும் லா சப்பல் பகுதியில் இரவு 10 மணிவரை மக்கள் நிறைந்திருந்தனர். ■

25 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## நேபாளம், வங்காளம், இலங்கை ஆட்சி மாற்றத்தில்

### சர்ச்சைக்குரிய இடஒதுக்கீடு:

இந்த போராட்டங்களுக்கு காரணம், சர்ச்சையிலிருந்த வேலைவாய்ப்பு இட ஓதுக்கீட்டால், பங்களாதேஷ் முழுவதும் மாணவர்கள் எழுச்சியால் அரசியல் வன்முறை வெடித்தது. 2024 ஜுலை 31 வரையில் இந்த வன்முறை மூலம் பங்களாதேஷ் பொருளாதாரத்திற்கு 10 பில்லியன் டொலர் மதிப்பிலான இழப்பு ஏற்பட்டது.

அன்றைய பிரதமர் ஷேக் ஹசீனா 2024 ஜனவரி மாதம் நடந்த பொதுத் தேர்தலில் 41.8மூ வாக்குகளைப் பெற்று மீண்டும் அதிகாரத்திற்கு வந்த பின், பல வருடங்களாகச் சர்ச்சையிலிருந்த வேலைவாய்ப்பு இட ஓதுக்கீட்டை மீண்டும் அமுலாக்கம் செய்யும் முயற்சியில் இறங்கினார்.

இதன் விளைவே ஆட்சியை இழந்து, பிரதமர் ஷேக் ஹசீனா நாட்டை விட்டு வெளியேறினார். மாணவர்களின் தொடர் போராட்டங்களால் பங்களாதேஷ் நாடு எப்போதும் இல்லாத வகையில் அமைதியற்ற நாடாக மாறியது. தினமும் பலர் கொல்லப்பட்டனர்.

இறுதியில் மாணவ போராட்டக்காரர்கள் பிரதமர் இல்லமான ஹணபபானுக்குள் (Ganabhaban) நுழைந்து மொத்த வீட்டையும் சூறையாடி அழித்தனர். ஆயினும் இதற்கு முன்பே பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தமது பதவியை ராஜினாமா செய்து விட்டு, அவருடைய சகோதரி ஷேக் ரெஹானாவுடன் வங்கதேசத்தை விட்டு ஹெலிகாப்டர் வாயிலாக இந்தியாவுக்குத் தப்பி வெளியேறி உள்ளார். இவை அனைத்திற்கு முக்கியமான காரணமாக இருந்தது அந்நாட்டில் அமலிலிருந்த சர்ச்சைக்குரிய வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டு முறை தான். இதை எதிர்த்து மாணவர் போராட்டங்களில் தொடங்கியது நாடு தழுவிய நெருக்கடியாக அதிகரித்தது.

### இலங்கையில் அரகலய போராட்டம்:

2022 இலங்கையின் பொருளாதாரத்தை தவறாக நிர்வகித்த அரசால், அடுத்தடுத்த பொருளாதார நெருக்கடி மற்றும் கடுமையான பணவீக்கம், நாள்தோறும் மின்தடை, மற்றும் எரிபொருள், உள்நாட்டு எரிவாயு, பிற அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறைக்கு வழிவகுத்தது.

அப்போது ஆட்சியில் இருந்த ராசபக்ச குடும்பத்தின் தலைமையிலான அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்பதே போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கையாகும்.

அந்நிய செலாவணி கையிருப்பு குறைவு, சமையல் எரிவாயு, பெட்ரோல், டீசல் பற்றாக்குறை, உணவுப் பொருள் தட்டுப்பாடு போன்ற பல்வேறு காரணங்களால் அரசு மீது அதிருப்தி கொண்ட பல்வேறு தரப்பினரும் 2022 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31 ஆம் திகதியன்று ஜனாதிபதியின் இல்லத்தை முற்றுகையிட்டனர். நூற்றுக்கணக்கான சமூக ஊடகத் தலைவர்களும் இம்முற்றுகையில் பங்கேற்று ஜனாதிபதியை பதவி விலகுமாறு கோரி போராடினர்.

பல ஆண்டுகளாக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வேண்டி, இளைஞர்கள் 2022 மார்ச் மாதத்தில், இலங்கையில் அரசுத் தலைவர் கோட்டபய்ய ராஜபக்சேவின் ஆட்சிக்கு எதிரான போராட்டங்களை தொடங்கினர். பெரும்பாலான எதிர்ப்பாளர்கள் தங்களை அரசியலற்றவர்கள் என்று கருதுகின்றனர், மேலும் சிலர் நாடாளுமன்ற எதிர்க்கட்சிகளின் மீது தமது அதிருப்தியையும் வெளிப்படுத்தினர். போராட்டங்களின் போது, எதிர்ப்பாளர்கள் “கோட்டா வீட்டுக்குப் போ“, “ராசபக்ச வீட்டுக்குப் போ“ போன்ற எதிர்ப்புகளை எழுப்பினர்.

அவசரகால நிலையைப் பிரகடனம் செய்தல், பொதுமக்களைக் கைது செய்ய இராணுவத்தை அனுமதித்தல், ஊரடங்குச் சட்டங்களை விதித்தல், சமூக ஊடகங்களுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துதல், எதிர்ப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், சமூக வலைத்தள ஆர்வலர்களைத் தாக்குதல் போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலம் அரசாங்கம் எதிர்வினையாற்றியது. எதிர்ப்புகளை ஒடுக்க முயற்சித்ததன் மூலம் அரசாங்கம் சட்டம் மற்றும் அரசியலமைப்பையும் மீறியது. புலம்பெயர்ந்த இலங்கையரும் இலங்கையில் அடிப்படை மனித உரிமைகள் நசுக்கப்படுவதற்கு எதிராகத் தத்தமது நாடுகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். ■

21 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பிள்ளையைப் பெற்றுவிட்டால்

ஒரு தந்தைக்குள்ளே தாயன்பு இருக்கின்றது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமைவதே இளகிய மனமுள்ள தாயுமானவரான பெரியாழ்வார் பாடல்கள். “பிள்ளையைப் பெற்றுவிட்டால் போதுமா? பேணி வளர்க்க வேண்டும் தெரியுமா“ என்பதை உணர்ந்து தம்முடைய கடமைகளை நிறைவுறச் செய்து, பிறப்பின் நோக்கம் உணர்த்தி, பிள்ளைகளை வளர்த்துவிட வேண்டியது பெற்றோர்களின் கடமை. வளர்ந்து பெரியவர்களாகும் பிள்ளைகளோ சூழலின் தாக்கத்தை அறிந்து கல்வி கேள்விகளில் சிறந்து தம்மைச் சீரமைக்க வில்லையானால் பிறப்பின் நோக்கம் பிழைத்தவர்களாவார்கள். ■

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## அறிவு; ஆற்றலின் நுட்பமான பயணம் 02

உதாரணமாக, வெப்ப இரத்தமுள்ள விலங்குகள் (warm-blooded mammals) உடல் வெப்பத்தைக் கட்டுப்படுத்த அதிக ஆற்றலைச் செலவழித்தாலும், பல்வேறு சூழல்களில் செழித்தன. எனவே, இயற்கை மீண்டும் மீண்டும் காட்டுவது: ஆற்றல் வீணாகவில்லை. அது பரிணாமத்தின் முதலீடு.

பின்னர்ப் பாலூட்டிகள் (mammals) சிறப்பான நுரையீரல், இரத்த ஓட்ட அமைப்பு, சிக்கலான மூளை ஆகியவற்றை வளர்த்தன இவை அனைத்தும் ஆற்றல் நிறைந்த உணவும் ஆக்ஸிஜன் நிறைந்த காற்றாலும் ஆதரிக்கப்பட்டது.

அடுத்து மனிதர்களை எடுத்துக்கொள்ளுங்கள். நம் மூளை மட்டும் நம் உடல் ஆற்றலின் சுமார் 20 வீதம் உபயோகிக்கிறது. நம் உடல்கள் வெறும் உயிர்வாழ்வதற்காக மட்டுமல்ல, அறிவாற்றல் மேம்படுவதற்காகவும் பரிணாமடைந்தன. கருவிகள், நெருப்பு, சமைத்தல், வேளாண்மை ஆகியவை அனைத்தும் அதிகப்படியான ஆற்றலைப் பெற உருவாக்கப்பட்டன. சமைத்த உணவு எளிதில் ஜீரணமாகி அதிகக் கலோரி தருவது ஒரு பரிணாம முன்னேற்றம்.

இதில் வேளாண்மை ஒரு முரண்பாடு என்று கூறலாம். வேட்டையாடலும் சேகரிப்பையும் (hunting and gathering) ஒப்பிடும்போது, விவசாயம் மிக அதிகமான உடல் ஆற்றலைக் கோரியது நிலங்களைத் துப்புரவு செய்தல், விதைகள் விதைத்தல், பாசனம் செய்தல், தானியங்களைச் சேமித்தல் ஆகியவை எல்லாமே கடின உழைப்பான செயல்முறைகளாக இருந்தன. ஆனால், இந்த அதிக ஆற்றல் செலவினையும் மீறி, வேளாண்மை நிலையான, முன்னறிவிக்கத்தக்க உணவுத் தயாரிப்பை ஏற்படுத்தியது. இது பெரிய மக்கள் தொகையைக் காப்பாற்ற முடிந்தது.

இந்த ஆற்றல் அதிகப்படியான நிலை, சிலரை உணவு தேடுதல் என்ற தொடர்ச்சியான பொறுப்பிலிருந்து விடுவித்து, தொழில்களின் பிரிவினை, கைவினைப் பணியின் சிறப்புக் கலைகள், இறுதியில் சிக்கலான சமூகங்களின் உருவாக்கத்திற்கு வழி வகுத்தது.

தொடரும்... ■




அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# மீண்டும் பற்றவைக்கப்பட்டிருக்கும் மாகாண சபை தேர்தல் விவகாரம்

மேற்கு மாகாணத்திற்கு (29.03.2014) தென் மாகாணத்திற்கு (29.03.2014) ஊவா மாகாணத்திற்கு (20.09.2014) இறுதியாக தேர்தல் நடைபெற்றது.

இந்நிலையில் 10 வருடங்களுக்கு மேலாக மாகாண சபைகள் முடங்கிப் போயிருக்கும் நிலையிலேயே இந் திய உயர்ஸ்தானிகர் இந்த கருத்தை வெளியிட்டிருக்கிறார். இங்கு உயர்ஸ்தானிகர் தெரிவித்திருக்கும் ஒற்றுமை என்ற விடயம் நீண்டகாலமாக பேசப்பட்டு வரும் விவகாரமாகும்.ஆனால் தமிழர் தாயகத்தில் அந்த ஒற்றுமை என்பது சிதறிப் போன ஒரு விடயமாக மாறியிருக்கிறது. அதனை இனிவரும் காலங்களில் சாத்தியமாக்க முடியும் என்பது எட்டாக்கனியான விடயமாகும்.அதனைவிட சந்தோஷ் ஜா ஒரு விடயத்தை உணர வேண்டும்.தமிழ் மக்களோ அல்லது தமிழ் தலைவர்களோ ஒற்றுமையாக நின்று கோரிக்கை வைத்ததனால் தானா இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானது?.அல்லது இந்தியா இதுவரை ஈழத்தமிழர்களும் தமிழ் தலைவர்களும் ஒற்றுமையாக நின்று கேட்டவற்றையா கொடுத்திருக்கிறது?இல்லை. தமிழ் மக்களின் கோரிக்கைகளையா நிறைவேற்றியிருக்கிறது?இன்றுவரை இந்தியா அப்படியொன்றை ஈழத்தமிழர்களுக்கு செய்ததில்லை.எல்லாமே தன்னிச்சையாகவும் இலங்கையின் ஆட்சியாளர்களின் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்பவுமே ஈழத்தமிழர்களை இந்தியா கையாண்டிருக்கிறது.அப்படியிருக்கையில், மாகாண சபை தேர்தலை நடத்துவதில் மாத்திரம் ஈழத்தமிழ் மக்களின் தலைவர்களின் ஒற்றுமையை பரிசோதனைக்குள்ளாக்குவதன் இந்தியாவின் வகிபாகம் என்ன?

முள்ளிவாய்க்கால் பேரவலத்துக்கு இந்தியாவின் பங்களிப்பு அபரிமிதமாக இருந்ததாக இலங்கையின் சிங்கள தலைவர்கள் அடிக்கடி பெருமிதத்துடன் கூறிவருவதை அவதானித்திருக்கிறோம். அப்படியென்றால் இலங்கை அரசுடன் இணைந்து அந்த பேரவலத்தை செய்வதற்கு இந்தியாவுக்கு எந்த தமிழ் தலைவர்கள் ஒற்றுமையுடன் கோரிக்கையை முன்வைத்தார்கள்?. உண்மையை சொல்லவேண்டுமாகவிருந்தால் தமிழ் தேசிய தலைவர்களிடத்திலிருக்கும் பிளவை பயன்படுத்தி இந்தியா தமிழர்களின் விவகாரத்திலிருந்து நழுவும் போக்கை கடைப்பிடிப்பதையே உயர்ஸ்தானிகரின் கருத்து வெளிப்படுத்துகிறது.இந்தியா எந்த காலத்திலும் தமிழ் மக்களுக்கு ஆதரவாக





இருந்ததாக வரலாறு இல்லை.இன்றும் சர்வதேச அரங்கில் இலங்கை ஆட்சியாளர்களை காப்பாற்றுவதில் இந்தியாவே முன்னணியில் இருந்துவருகிறது. பூகோள அரசியல் பரப்பில் எந்தக்காலத்திலும் இலங்கை இந்தியாவுக்கு தேவையான ஒரு நாடாக இருந்திருக்கிறது. அதற்காகவே இலங்கை விவகாரத்தில் மூத்த அண்ணனை போல் இந்தியா எந்நேரத்திலும் மூக்கை நுழைத்துக் கொண்டு வந்திருக்கிறது.13 ஆவது திருத்த சட்டமாக இருக்கட்டும் அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவத்தை தமிழர் தாயகத்தில் இறக்கி தமிழர்களை வேட்டையாடியதாக இருக்கட்டும் 2009 இல் தமிழர்களை அழிப்பதற்கு இலங்கை அரசுக்கு உதவியதாக இருக்கட்டும் இப்படி எல்லா சந்தர்ப்பத்திலும் தனது பூகோள நலனை முன்னிறுத்தி அந்தந்த கால கட்டத்துக்கு ஏற்ப தன்னை மாற்றிக் கொண்டு இலங்கைக்கு ஒரு அணிலாக இந்தியா இருந்திருக்கிறது.

இன்றும் இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு ஆதரவாகவே இந்திய உயர்ஸ்தானிகர் பேசியிருக்கிறார். அதாவது இலங்கையின் ஆட்சியாளர்கள் மாகாண சபை என்ற முறையை இல்லாமலாக்குவதற்கு முயற்சிகளை , எடுத்துவரும் நிலையில்,மாகாண சபை தேர்தலில் தாங்கள் (இந்தியா)தலையிடா மல் இருப்பதற்கு தமிழ் தலைவர்களின் ஒற்றுமையின்மையே காரணம் போன்ற தொனியில் பேசி இலங்கை ஆட்சியாளர்களின் மறைமுக திட்டத்துக்கு ஆதரவாக அவர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

மாகாண சபை முறைமையினால் ஈழத்தமிழர்கள் கண்டவை எதுவுமல்ல. அதிகாரங்கள் முழுவதையும் மத்தி வைத்துக்கொண்டு வெறும் சக்கையை (மாகாண சபை) வைத்துக்கொண்டு ஈழத்தமிழர்கள் எதனையும் சாதிக்கப் போவதில்லை.ஆகவே மாகாண சபை தேர்தல் தொடர்பில் இலங்கை அரசியலில் பேசப்பட்டுவரும் கருத்துக்கள், ஈழத் தமிழர்களுக்கு முன்னால் இருக்கக் கூடிய பிரச்சனைகளை மழுங்கடிக்கும் ஒரு நரித்தன அரசியலாகவே பார்க்க வேண்டியிருக்கிறது. ஏமாற்றங்களால் வடிவமைக்கப்பட்டிருக்கும் ஈழத்தமிழரது அரசியலில் இந்தியாவின் வகிபாகமும் அதிகமாக இருக்கிறது.ஆகவே ஈழத் தமிழர்களை இனியும் ஏமாற்றாது அந்த மக்கள் கேட்பவற்றுக்கு முன்னுரிமை கொடுத்து அதன் பின்னால் இந்தியா நிற்கும் ஒரு சூழலை ஏற்படுத்துவதே ஈழத்தமிழினத்துக்கு செய்யும் பெரிய உபகாரமாக இருக்கும். ■

---



## எதிரிகள் நண்பர்களாக மாறும் போது....

பல முக்கிய அரசியல் தலைவர்கள் ஒரு நாளைக்கு அரசியலை ஒதுக்கி வைத்து விட்டு, ஒரு திருமண விழாவில் கூடி, புன்னகையையும், இதயப்பூர்வமான உரையாடல்களையும் பகிர்ந்து கொண்டனர்.

அமைச்சர் விஜித ஹேரத், பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர்கள் ராஜித சேனாரத்ன மற்றும் மேர்வின் சில்வா ஆகியோர் விருந்தினர்களாக கலந்து கொண்டனர். ■








அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்







# களிமண்ணில் பிள்ளையார் சிலை வடிப்புப் பட்டறை



யேர்மனியில் ஆவணி சதுர்த்தியில் முதன் முதலாக களிமண்ணில் விநாயகர்சிலை செய்யும் தன்சிந்தையில் உதித்த நல்லெண்ணத்தை, செயல்முறையாக காட்டினார் செல்வி ஷறீகா சிவநாதன். இதனை சுவேற்றா ஸ்ரீ கனகதுர்க்கா ஆலயத்தில் இளம் சமுதாயத்தினருக்கு பட்டறையாகச் செய்து காட்டினார். பலரும் இதனை வரவேற்றனர். பலமாணவர்கள் இதில் ஆவலாகக் கலந்து சிறப்பித்தனர்

இதில் ஐரோப்பிய பல மாணவர்களும் கலந்து கொண்டளர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆவலுடன் மாணவர்கள் சிறப்பாகச் செய்தமையைக் காண முடிந்தது. ஆலயகுருக்களும் ஷறீகா சிவநாதன் ஆசி வழங்கிப்பாராட்டினார்.

விநாயகர் ஆசி அனைவரும் பெற்று மகிழ்ந்தனர்.

09 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## எமது வீட்டில் அதிகம் அடிபட்ட நெல்லிமரம்

எனக் கேட்பவர்களும் உள்ளனர். உளவியல் ரீதியாக விளக்குவதாயின் அவர்களது நடத்தையை திடிர் உணர்வு நடத்தை. (Impulsive behaviour) எனலாம். தீடீர் உணர்வு நடத்தையின்போது ஒருவர் பக்கவிளைவுகளையோ, காரணகாரியங்களையே ஆராய்வதில்லை. சடுதியாக ஒரு நிகழ்ச்சியைக் கண்டதும் வேறு ஏதும் சிந்தனை ஏற்படாமல் அதனைத் தீர்ப்பதற்கே முனைவார். தீடீர் உணர்வு நடத்தையை சாதரணமாக உணர்ச்சியைத் தூண்டும் ஒரு சம்பவத்தின் போது காண்பிக்கபட்ட ஒரு பிரிதிவினையாகவே கருதுவார்கள். ஊளவிலாளர்கள் இதனைக் கூட ஒரு உளநோய் எனக்கூறுகின்றார்கள். (Border line Personality Disorder- B:P.D) வள்ளல்களின் செயற்பாடுகள் , அதியமான் உட்பட எல்லாரதுமே, தீடீர் உணர்வு நடத்தையேதான். நெல்லிக்காயை ஆங்கிலத்தில் (Gooseberry) என அழைப்பார்கள். அதன் தாவர இயல் பெயர் Phyllanthus emblica Phyllantheceae குடும்பத்தினைச் சேர்ந்து.

இந்த நெல்லியைத்தவிர வேறும் இரண்டு நெல்லிகளின் பெயர்கள் நம்மவர்களுக்க பரீட்சியமாக இருக்கும். ஆவை அரை நெல்லியும் ,கீழ்க்காய் நெல்லியும் ஆகும். இந்த மூன்று வகைநெல்லிகளையும்



பார்ப்போர் இவை எப்படி ஒரே குடும்பத்தினைச் சேர்ந்தவையாக இருக்கமுடியும் என ஆச்சரியப்படுவார்கள். கீழ்க்காய் நெல்லி என்பது ஒரு அடி உயரத்திற்குமெல் வளராத இரண்டும் கெட்டான் தாவரம். பூண்டு எனவும் இதனை அழைப்பார்கள். இதனை எவரும் பயிரிடுவதில்லை ஆனால் வீட்டிலே ஒருவருக்கு செய்கைமாரி (Jaundice) வந்தால் மாத்திரம் இதற்கு பெரும் மவுசு வந்துவிடும். வீட்டுக்குவீடு கோடிகள் எல்லாம் தேடத்தொடங்கிவிடுவார்கள். செங்கைமாரினிபோது ஈரல்கலங்கள் பாதிக்கப்படுகின்றன. ஈரலைப் பேணுவதற்கு இதனை அவித்துக்குடிப்பார்கள். குலாநிதி சிவகடாட்சம் நிறையவே ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்துவைத்துள்ளார்.ஆயள்வேதம் சம்மந்தமாக ஆய்வு செய்பவர். நுல்ல வழக்கறிஞர் ஆயுள்வேதம் சம்மந்தமாக பல நூல்களை எழுதியுள்ளார். ஆதில் ஒன்று ஆங்கிலத்திலும் பிரதியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் நெல்லிக்காய் பெருமளவிலே ஆராய்வுக்குட்பட்டுள்ளது. அதன் விளைவாக நெல்லியின் வயிரஸ் எதிர்ப்பு வலு (Antviral) பக்ரீரியா எதிர்ப்பு வலு (antivacterial) பற்றி உலகிற்கு அறியத்தரப்பட்டுள்ளன. இன்றைய ஆராய்ச்சியை அன்றைய அனுபவம் அப்போதே சொன்னதை உணரமுடிகிறது. நேல்லி நம்மூருக்கு உரியது என்பதனால் அதன் உபயோகம் ஆயள்வேதத்தில்தான் பிரயோகிக்கப்பட்டாலும் அதன் மிகப்பிரதானமான கூறுகள் மேலத்தேயவைத்திய முறைகளில் பிரதானம் பெறுவதைக்காணலாம். நேல்லிக்காயின் கூறுகளில் வேறு எந்தப்பழத்திலும் காணமுடியாத அளவு வைட்டமின் ஊ உள்ளது. ஐவட்டமின் டீ யும் கணிசமான அளவு இருப்பதுடன் கல்சியம் பொஸ்பரஸ் குரோமியம் மற்றம் இரும்புபோன்ற கனிமங்களும் தாராளமாக இதில் உள்ளன. சாதரணமாக உடற்கலங்கள் ஒட்சி ஏற்படுகையில் நுரையிலில் இருந்து கொண்டுவரப்படும் ஒட்சிசன் உபயோகப்படுகிறது. ஆந்தச்சமையத்திலே துணைவிளைவுகளாக உடலுக்கு ஊறு விளைவிக்கக்கூடிய பல பதார்த்தங்கள் தோன்றுகின்றன இதனைத் தடைசெய்வதற்காக கலங்களிலே ஒட்சி ஏற்ற எதிரிகள் உள்ளன. வைற்றமின் ஊ மிகச்சிறந்த ஒட்சிஏற்ற எதிரியாக செயற்படுகின்றது. சதையியில் (pancreas) சிறு சிறு திணிவுகளாக கலக்குவியல்கள் காணப:படுகின்ற என்பது தெரிந்ததே. இக்கலத்திணிவுகளை இலஞ்சகனின் சிறுதீவுகள் என்கின்றோம். இவற்றினால் சுரக்கப்படும் இன்சுலின் கோமோன் குரதியால் எடுத்துச்செல்லப்பட்டு மேலதிகமான வெல்லத்தினை குளுக்காகோன் என்னும் பதார்த்தமாக மாற்றி ஈரல்கலங்களில் சேமித்து வைக்கின்றது. தேவை ஏற்படுகின்ற சமயங்களில் இந்த குளுக்காகோன் (Glucagon) மீண்டும் வெல்லமாக மாற்றப்படுகின்றது. நெல்லிக்காயில் காணப்படும் குரோமியம் எனும் கனிமம் இலஞ்சகனின் சிறுதீவுக்கலங்களைத் தூண்டி இன்சுலினைச் சுரக்கவைக்கின்றது. இதனால் சலரோகம் பெருமளவில் கட்டுப் படுத்தப்படுகிறது.

1950 களில் தோலகட்டியில் உள்ள கிறிஸ்தவசபையினர் நெல்லிரசம் செய்து விற்றார்கள். அதற்கு முன்னதாகவே இந்த நெல்லிரசத்தை எமக்கு எமது குடும்ப நண்பர் வேலுவின் மலையகத்தைச் சேர்ந்த அவரது மனைவி செய்து தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.






அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்

# ஜனநாயகனை மிரட்டும் பராசக்தி



சுதா கொங்கரா இயக்கத்தில் சிவகார்த்திகேயனின் 25ஆவது படமாக உருவாகி வருகிறது ?பராசக்தி' இதில் ரவிமோகன் வில்லனாக நடிக்க, முக்கிய வேடங்களில் அதர்வா, ஸ்ரீலீலா நடிக்கின்றனர்.

இதன் படப்பிடிப்பு நடந்து வருகிறது. இப்படம் 2026, ஜனவரி 14ஆம் திகதி பொங்கல்லுக்கு வெளியாகுமென அதிகார பூர்வ மாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே பொங்கலுக்கு வினோத் இயக்கத்தில் விஜய் நடிக்கும் ஜனநாயகன் படமும் ஜனவரி 9 வெளியாகுமென அறிவி க்கப்பட்டுள்ளது. ஒருவாரம் கழித்து சிவகார்த்திகேயன் படம் வெளியாகிறது.

இதனால் ஜனநாயகன் படத்தின் தியேட்டர்கள் குறைக்கப்படும். இது நிச்சயம் ஜனநாயகன் படத்திற்கு வசூல் ரீதியாக பாதிப் பையே ஏற்படுத்தும் என்கின்றார்கள்.



# இறுதிவரை நிறைவேறாத ரோபோ சங்கரின் ஆசை



மறைந்த ரோபோ சங்கரின் நிறைவேறாத ஆசை குறித்த தகவல் வெளியாகியுள்ளது.

பிரபல நடிகரான ரோபோ ஷங்கர், படப்பிடிப்பில் இருந்த போது மயக்கமடைந்ததால், உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்ட பின்னரும், சிகிச்சை பலனின்றி நேற்று இரவில் உயிரிழந்தார்.

ரோபோ சங்கரின் மறைவு, திரையுலகை அதிர்ச் சியில் ஆழ்த்தியுள்ளது.

ரோபோ சங்கரின் மறைவிற்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் கட்சி தலைவர்கள் தெரிவித்துள்ளனர். மேலும், நடிகர்கள் மற்றும் ரசி கர்கள் அவரின் உடலுக்கு நேரில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

ரோபோ சங்கர், நடிகர் கமலஹாசனின் தீவிர ரசிகர் ஆவார். தனது குடும்பத்தில் எந்த நிகழ்வாக இருந்தாலும், கமலுக்கே முதல் அழைப்பிதழ் கொடுப்பார்.

அவருக்கு பேரன் பிறந்த போது, கமலஹாசனின் கையில் குழந்தையை வழங்கி பெயர் வைக்க கூறினார்.

தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தின் ப்றொபைல் படத்தில் கூட கமலஹாசன் தனக்கு முத்தமிடும் படத்தையே வைத்திருப்பார். கமலை ஆண்டவர் என்றே ரோபோ சங்கர் அழைப்பார்.

ரோபோ சங்கரின் இறப்பு செய்தியை கேட்ட கமல் முதல் ஆளாக இரங்கல் தெரிவித்தார்.

இந்த அளவிற்கு தீவிர கமல் ரசிகரான ரோபோ சங்கருக்கு, கமலுடன் ஒரு படத்தில் ஒரு காட்சியி லாவது இணைந்து நடித்து விட வேண்டும் என்ற ஆசை இருந்ததாம். ஆனால் அந்த ஆசை கடைசி வரை நிறைவேறாமலே போய் விட்டது.

ரோபோ சங்கரின் உடலுக்கு அஞ்சலி செலுத்த வந்த மதுரை முத்து, இந்த தகவலை பகிர்ந்து கொண்டார்.



# தயாரிப்பாளரான சிம்ரன்

திருமணத்துக்கு பிறகு பல படங்களில் சிம்ரன் நடித்தபோதும் சசிகுமாருக்கு ஜோடியாக அவர் நடித்த டூரிஸ்ட் பேமிலி படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. இதனால் அடுத்தபடியாக அழுத்தமான கதாபாத்திரங்களில் மட்டுமே நடிப்பதில் ஆர்வம் கட்ட தொடங்கி இருக்கிறார்.

இந்த நேரத்தில் புதிய பட நிறுவனம் ஒன்றையும் தொடங்கியுள்ளார் சிம்ரன். அந்த நிறுவனத்துக்கு போர் டி மோஷன் பிக்சர்ஸ் என்று பெயர் வைத்திருக்கிறார்.

இந்த தனது புதிய நிறுவனத்தின் சார்பில் ஆக்‌ஷன் திரில்லர் கதையில் ஒரு புதிய படத்தை தயாரிக்கும் சிம்ரன் அதில் தானே கதையின் நாயகியாக நடிக்கிறார். புதுமுக இயக்குனர் ஷியாம் என்பவர் இயக்குகிறார்.

அதோடு இந்த நிறுவனத்தில் தயாரா கும் படங்களில் தான் நடிப்பது மட்டுமி ன்றி, அடுத்தடுத்து முன்னணி நடிகர் களை வைத்து படங்கள் தயாரிப்பதற்கு திட்டமிட்டுள்ளார் சிம்ரன்.

# அஜித் 64 புதிய தகவல்



சில மாதங்களுக்கு முன்பு ஆதிக் ரவிச் சந்திரன், அஜித்குமார் கூட்டணியில் வெளியான குட் பேட் அக்லி படத்தின் வெற்றியைத் தொடர்ந்து மீண்டும் அஜித், ஆதிக் ரவிச்சந்திரன் கூட்டணி யில் புதிய படம் உருவாகிறது.

இந்த படத்தை ரோமியோ பிக்சர்ஸ் ராகுல் தயாரிக்கிறார். அடுத்த மாதத்தில் இந்த படத்தின் படப்பிடிப்பு ஐதராபாத்தில் தொடங்கும் என்கிறார்கள்.

இந்த படத்தில் நடிப்பதற்காக மோகன்லால், ஸ்ரீலீலா ஆகியோ ரிடம் கால்ஷீட் திகதி வாங்கியுள்ளனர். விரைவில் இந்த படத்தின் மற்ற அதிகார பூர்வ அறிவிப்புகள் வெளியாகும் என்கிறார்கள்

# இறுதிக்கட்டத்தில் காஞ்சனா 4



காஞ்சனா படத்தின் நான்காவது பாகத்தை தற்போது தயாரித்து, இயக்கி, நடித்து வருகிறார் ராகவா லோரன்ஸ். இந்த படத்தில் அவருடன் பூஜா ஹெக்டே, நோரா பதேகி, கோவை சரளா, தேவதர்ஷினி, ஸ்ரீமன் உள்ளிட்ட பலர் முக்கிய வேடங்களில் நடிக்கிறார்கள்.

இதன் படப்பிடிப்பு சில மாதங்களாக தொடர்ந்து நடைபெற்று வரும் நிலை யில் தற்போது இறுதி கட்டத்தை எட்டி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

அதோடு இந்த படத்தில் கிராமபிக்ஸ் காட்சிகளும் அதிகமாக இடம்பெறுவதால் முந்தையை பாகங்களைவிட இந்த படத்தின் இறுதிகட்ட பணிகள் வழக்கத்தை விட அதிகமான நாட்கள் நடைபெறும் என்றும் காஞ்சனா- 4 பட குழுவில் கூறுகிறார்கள்.








அனைவருக்கும் தித்திக்கும் தீபத் திருநாள் நல்வாழ்த்துக்கள்



Jasmine Silk House
ஆடைகளின் ராணி
04.10.2025 முதல்
20.10.2025 வரை
தீபாவளியை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை
" என்றும் புதியது
ஆடைகள் என்றும் புதியது ! "
எமது இனிய
தீபாவளி
வாழ்த்துகள்
Tel: 02102 844744
HP: 0173 1937 325
'Jasmine Silk House" Fester Str.50- 40882 Ratingen




TRUST TRAVELS
Reisebüro
இலங்கை, இந்தியா மற்றும் அனைத்து நாடுகளிற்குமான
பயணச்சீட்டைகள்,
வீசாக்கள் அனைத்தையும்
குறைந்த செலவில் விரைவாகப் பெற்றுக்கொள்ள
நாடுங்கள்...
TRUST TRAVELS
A9 Road,Kilinochchi,
Srilanka.
+94 776 668 381
trusttravelsffm@gmail.com
TRUST TRAVELS
Mosel str 33
60329 Frankfurt am main
+49 176 45656520
Lufthansa
IndiGo
மருதம் தங்ககம்
HOTEL MARUTHAM
A9 வீதி, கிளிநொச்சி
நகரின் மையத்தில்,
அனைத்து வசதிகளுடன்
புதிய தங்குமிடம்.
+94 212 286 677
+94 776 665 685
இனிய தீபாவளி நல்வாழ்த்துகள்
Non smoking rooms
Parking
Family rooms
24 Hours front desk
Lift
AC/NON AC
ROOMS
A/C Rooms
Intercom system
Van Hire services
Attached bathrooms
TV




KANTHAN
JEWELRY MARKT
காந்தன் தங்க நகை மாடம்
தரமான தங்க நகைகள்
புத்தம் புது டிசைன்களில்
எம்மிடம் கிடைக்கும்.
யேர்மனி டோட்முண்ட் நகரில்
பொன் ஒளி வீசும்
காந்தன்
தங்க நகை
மாடம்
RHEINISCHE STR. 72 / 44137 / DORTMUND / GERMANY
0172 8684 203 / 0231 5898 7828 /
அனைவருக்கும்
இனிய தீபாவளி
நல்வாழ்த்துகள்




Jaffna SUPER.MARKT
Jaffna Super markt
WELCOME IM Jaffna SUPER.MARKT
Lebensmittel aus Asien, Afrika,China und Orient
எம்மிடம் நம்பி வாங்கோ...! சந்தோசமாகப் போங்கோ...!!!
இனிய தீபாவளி
நல்வாழ்த்துகள்
Tel: 0179 2310 560
Lido a Casa
www.lidoacasa-ms.de
Wolbecker Str.16a – 48155 Münster (Eingang von Bremer Platz neben Parkhaus Ausgänge)